Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 28 00 5 94 வெள்ளிக்கிழமை ஓசை 77

## ஆங்கில ஆசிரியருக்கு அறிவு விருத்தி வகுப்பு

ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில அறிவு விருத்தி வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன- மேற்படி வகுப்பில் பங்கு கொள்ள விரும்பும் கீழ்க் காணும் தகைமையுள்ளோர் தத்தம் சுய விபரங்களை பூரணமாக எழுதி பிரதிக் கல்விப்பணிப் பாளர், துரை தியாகராஜா, ஆங்கிலம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்- இதற்கான தகைமை விபரங்கள வருமாறு:- (12ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு ஆயர்கள் ஜனாதிபதி டி. பி. சந்திப்பு

## தீர்வுபற்றி பேசுவதை டி. பி. தவிர்ப்பு

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கு மாகாண கத்தோலிக்க மறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆயர்கள் கடந்த மாதம் இறுதியில் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைக் கொழும்பில் சந்தித்தனர் இச் சந்திப்பின் போது வடக்கு - கிழக்குப் பிரச்சினை குறித்து ஆயர்கள் கூறியதை டி பி. விஜேதுங்கா செவிமடுத்தார் ஆயினும் பிரச்சினை தீர்வு குறித்து அவர் எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை எனவும் அறியவருகின்றது:**

கடந்த மாத இறுதியில் நடைபெற்ற மேற்படி சந்திப்பின் போது யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், மன்னார் மறை மாவட்ட ஆயர் ராயப்பு யோசப், மட்டக்களப்புத் திருகோணமலை மாவட்ட ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆகிய வடக்கு கிழக்கைச் சேர்ந்த மூன்று ஆயர்களும் கலந்து கொண்டனர்

ஜனாதிபதியுடன் ஜனாதிபதியின் செயலாளர் திரு விஜயதாசாவும் மேலும் சில அதிகாரிகளும் உடன் இருந்தனர்

வடக்கு கிழக்கு பிரச்சினை குறித்து பிரஸ்தாபித்த ஆயர்கள் வடக்கு கிழக்கின் இன்றைய நிலைமை குறித்தும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் எடுத்து விளக்கினர். அத்துடன் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டிய தன் அவசியம் குறித்தும் ஜனாதிபதிக்கு வலியுறுத்திக் கூறினர். ஆயர்கள் கூறிய அனைத்து விடயங்களையும் செவிமடுத்த ஜனாதிபதி விஜேதுங்கா பிரச்சினைக்கான தீர்வு குறித்து எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை என்றும் வடக்கு கிழக்கில் நிலவும் பிச்சினைகள குறித்து தனக்கு அடிக்கடி தகவலகளைத் தந்துதவும்படியும் அதற்காக தான் இவ்வாறான சந்திப்புக்களை விரும்புவதாகவும் தெரிவித்ததாக கொழும்பில் இருந்து எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன-

மேற்படி சந்திப்பின்போது (12ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து சுன்னாகம்மயிலணிப்பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது நேற்றிரவு எறிகணைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன

நேற்று இரவு 8. 30 மணியளவில் மேற்படி பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் மூன்று பேர் படு (11ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கிராமங்கள் மீது தொடரும் எறிகணை வீச்சு

### 300 மக்கள் இடம் பெயர்வு

வவுனியா பூவரசங்குளம், கணேசபுரம் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் எறிகணைத் தாக்குதல்களால் 300க்கு மேற்பட்ட தமிழ் குடிமக்கள் வெளியேறியுள்ளனர்.

புலவனார் ஊர், வேலங்குளம், மடுக்குளம் பகுதிகளிலிருந்தே பெருமளவு மக்கள் வெளியேறியுள்ளனர்.

இரவு பகலாக மக்கள் குடியிருப்புகள் மீது எறிகணைத் தாக்குதலை நடாத்தியுள்ளது. இதனால் பல வீடுகள் சேதமடைந்தன.

## அரசியல்வாதிகளின் கூட்டத்தில் கடற்படையினர் கலந்து கொள்ளார்

### மேற்குப் பிராந்திய தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் எந்தவொரு கூட்டத்திலும் கடற்படை அதிகாரிகள் கலந்து கொள்ள மாட்டார்கள் இவ்வாறு சிறிலங்காவின் மேற்குப் பிராந்திய கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்

புத்தளம் மாவட்டத்தில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் கூட்டமொன்றில் உள்நாட்டலுவல்கள் பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தலைமை வகித்தார்

இந்த மாநாட்டிற்கு வருகை தருமாறு கடற்படை அதிகாரிகள் அழைக்கப்பட்ட போதும் அவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை இக்கூட்டத்திற்கு மீன்பிடித் துறை அமைச்சு அதிகாரிகளும்கலந்து கொள்ளவில்லை

இந் நிராகரிப்புப்பற்றி கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சரத்சந்திரா குணரட்ண, பொது மக்களின் பணத்தில் பணியாற்றும் கடற்படையினர் கூட்டத்தில் கலந்துகொள்ளாது அலட்சியப்படுத்தி விட்டனர், இதனால் அங்குவாழும் 10 ஆயிரம் குடும்பங்களின் பாதுகாப்பு அலட்சியப் படுத்தப்பட்டுள்ளது என்றார்,

## நம்பிக்கையில்லாப் பிரேரணை

# நான்கு அமைச்சர்கள் வாக்களிக்கவில்லை

(கொழும்பு)

நான்கு எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் 40 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது

இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 71 வாக்குகளும் எதிராக 111 வாக்குகளும் கிடைத்தன, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோசலிச முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

அமைச்சர்களான சிறிசேன (12ஆம் பக்கம் பார்க்க)

## பொறியியலாளர் படுகொலை; இருவருக்கு மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

மந்துவில்மேற்கைச் சேர்ந்த பொறியிடலாளர் சதாசிவம் செல்வகுமார் என்பவரை அவரது வீட்டுவளவில் அமைந்திருக்கும் மலசல கூடத்துள் வைத்து பாளைக்கத்தியால் வெட்டிப் படுகொலை செய்த செல்லையா மயில்வாகனம், திருமேனிநேசராசா ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

இதுகுறித்து தமிழீழ காவல் துறையினர் வெளியிட்ட செய்திக் குறிப்பில்;

மந்துவில்மேற்கைச் சேர்ந்த பொறியியலாளர் சதாசிவம் செல்வகுமார் (வயது 42) என்பவர் 1993-05-26 ஆம் திகதி இரவு 11.00 மணியளவில் அவரது வீட்டு வளவில் அமைந்திருக்கும் மலசலகூடத்துள் வைத்து பாளைக் கத்தியால் செல்லையா மயில்வாகனம் அல்லதுகுமார், திருமேனி நேசராசா ஆகியோரால் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டார் இப் படுகொலை சம்பந்தமாக தகவல் கிடைத்ததும் தமிழீழ காவல் துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் புலன் விசாரணையை மேற்கொண்டனர். விசாரணையின் போது கிடைக்கப் பெற்ற சாட்சியங்களின் பிரகாரம் சந்தேகநபர்களைக் கைது செய்து, விசாரணையை வெற்றிகரமாக முடிவுக்குக்கொண்டு வந்தார்கள்.

படுகொலை செய்யப்பட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினையில் தலையிட மகாராணியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்சினையில் தலையிட்டு சகல பிரஜைகளுக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்யுமாறும் இலங்கையில் நிலவும் இராணுவச் சூழ்நிலைக்கும் ஆயுத கலாசாரத்திற்கும் முடிவுகட்டுமாறும் பிரிட்டிஷ் எலிசபத் மகாராணியிடம் லண்டனைத்தலைமையமாக கொண்டியங்கும் தமிழீழ சர்வதேச ஆராய்ச்சி நிறுவனத்தின் செயலாளர் கே. சிறீனிவாசன் கடித மூலம் கேட்டுள்ளார்-

மனித உயிருக்கு இலங்கையில் மதிப்பேயில்லை- தமிழினம் ஒட்டு மொத்தமாக அழிக்கப்படுவதைத் தடுத்து நீதிவழங்க தலையிட வேண்டும் என கேட்டுள்ளார்.

## வன்னி, முல்லை, மன்னாரில் த.பொ.தே. பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களில் தமிழீழ பொதுக் கல்வித்தேர்வில் கோட்ட மட்டங்களில்வெற்றி பெற்றவர்களுக்கான தமிழீழ தேசியத் தலைவரின் பரிசில்களும் கல்வி மேம்பாட்டுப் பேரவையின்பரிசில்களும்வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன

பரிசில்களை தமிழீழ துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன், வன்னி மாவட்டத் தளபதி சூட்டி, கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் கமலநாதன் ஆகியோர் வழங்கினர்

ஆறுமாணவர்களுக்கு இப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்த, உடன் கண்ணாடி வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக)ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (8199)

**கோழி பராமரிப்பவர் தேவை**

எமது கோழிப்பண்ணையில் கோழி பராமரிப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நேர்க்காணும் முகவரிக்கு 6-5-94 காலை 10 மணிக்கு நேரில் வரவும். அந்திவானம் பதிப்பகம் நாவலர் வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம். (8182)

**பால் போஷா**

குடும்பத்திலுள்ள சகலருக்கும் ஏற்ற தரமானசத்துணவு பாம்போஷா.ப. அ. சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனையாகின்றது. (சி-9332)

**சாரணியம்**

கதிர் வெளியீட்டகத்தாரின் சாரணர்களுக்கும், சாரண தலைவர்களுக்குமான அரிய பல விடயங்களை உள்ளடக்கிய கையேடு-பாகம் I வெளிவந்துள்ளது. கிடைக்குமிடம்: தமிழ்த்தாய் புத்தகசாலை (யாழ்ப்பாணம்) அருள் என்ரபிறைஸ் (சுன்னாகம்) (8208)

**இலவச கண் சிகிச்சை**

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 தொடக்கம் மாலை 5 மணி வரை சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் இலவச கண்சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது.

இதில் மூக்குக் கண்ணாடி அணிய வேண்டியவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மூக்குக்கண்ணாடிகளை இலவசமாக வழங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது (மு)

**கலந்துரையாடல்**

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் 07-05-1994 சனிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். அனைத்து வானொலிக் கலைஞர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**மெய்வல்லுநர் போட்டி**

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி கல்லூரி அதிபர் திரு. க. சந்திரசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (மு)

❀ ❀

(தென்மராட்சி)

கச்சாய் துறையூர் காண்டீபன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (86)

## மகாபொல புலமைப்பரிசில் பரிசளிப்பு வைபவம்

(நமது நிருபர்)

1992/93-ம் ஆண்டிற்கான மகாபொல உயர் கல்வி புலமைப் பரிசளிப்பு வைபவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் மற்றும் சகல பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், கல்விப் பணிப்பாளர்கள், உயர்தர பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூர் திணைக்களத் தலைவர்கள், மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் வைபவத்தில் மாணவர்களுக்கான புலமைப் பரிசுச் சான்றிதழையும் காசோலையையும் யாழ். அரச அதிபர் வழங்குவார் என தெரிவிக்கப்படுகிறது. (ச),(சி)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு : 03 - 09 - 1915



உதிர்வு : 06 - 04 - 1994

**அமரர் திரு. க. அந்தோனிப்பிள்ளை**

எங்கள் இதய தெய்வமே ஐயா,

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், நற்பண்பின் உறைவிடமாய், நற்பாசத்தின் இருப்பிடமாய், நம் குடும்பத்தின் சிகரமாய், நம்மையெல்லாம் நல்வழி காட்டி, அவ்வழியே வாழவைத்த, எங்கள் அன்புத் தெய்வமே, என்றும் எங்கள் இதயத்தில் வீற்றிருக்கும் எங்கள் ஐயாவே, உங்கள் பிரிவால் துயருறுகின்றோம்,

உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகள், மலர் வளையங்கள் அனுப்பியும், மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

''ராணி வாசா'' இளவாலை (8208) அ. மரியரட்ணம் (கதா)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



**2-ம் லெப். குமரன்**

(இராஜேந்திரம் ஸ்ரீதரன்) [மோகன்]

மந்துவில் மண்ணில் 1977-03-31 | மணலாற்று மண்ணில் 1994 03-23

மந்துவில் மண்ணில் மழலையாய் வந்துதித்த
மாதவச் செல்வனே ''குமரா'' — நீயும்
வீரமறவன் வழியிலே......
மண்மீட்கும் போரிலே......
மணலாற்றுக் களமதில் மாவீரனாகி
தமிழீழ தேசமதன் விடிவிற்காய் உனையீந்தாய்
தரணியில் என்றும் மரணமில்லை உன்வழியில்.

உன் பிரிவால் துயருறும்...

மந்துவில் கிழக்கு, கொடிகாமம். (8137) குடும்பத்தினர்

## யாழ் வணிகர் கழகம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட போசனசாலை, சிற்றுண்டிச்சாலை, தேநீர்ச்சாலை, குளிர்பானநிலையம் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் உணவகங்களின் முகாமைத்துவம் பற்றி ஓர் அடிப்படைக் கற்கைநெறி படிப்பு நடைபெறுவதால் மேற்குறிப்பிட்ட சகல வணிக நிலைய உரிமையாளர்களும் தவறாது இக் கற்கை நெறியில் பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நேரம்:- சனிக்கிழமைகளில் 02.00-05. 30 வரை
ஞாயிற்றுக்கிழமைகளில் 09.00 - 12. 30 வரை

காலம்:- 24. 04. 94 தொடக்கம் 18. 06. 94 வரை

நன்றி, வணக்கம்

யாழ் வணிகர் கழகம்
21, மேல் மாடி சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

(சி 9356)

## அந்தியேஷ்டி அழைப்பு

1994 - 05 - 06



மலர்வு : 1923 - 03 - 17

உதிர்வு : 1994 - 04 - 06

**திருமதி இலட்சுமிப்பிள்ளை ஐயாத்துரை**

எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேஷ்டிக் கிரியை 06-05-94 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் அதில் கலந்து சிறப்பிப்பதுடன், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

புலோப்பளை, பளை. (8207) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நினைவு கூருகின்றோம்..

**06.05.1994**

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - கோவில் போரதீவுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். வாமதேவன் / ஐம்பட்டியான்** (பூபாலப்பிள்ளை பிரதீஸ்வரன் - மண்டூர்-மட்டு)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் போதுமகன்,

1991ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த,

**ஜீவன்** (கணபதிப்பிள்ளை செந்தில்ராஜ் - தேவிபுரம் - மட்டு)

மட்டு - கொம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கபில்** (இராசரட்ணம் - சிவகுமார் - கொம்மாந்துறை - மட்டு)

நானாட்டான் குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**லெப். உத்தமன்** (வேலாயுதம் குபேந்திரன் - 12ஆம் கட்டை, இறக்கண்டி - திருமலை)

மட்டு - பெரியபுல்லுமலை - வெளிச்சாண்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்

1992ஆம் ஆண்டு அதிர்ச்சி காரணமாக எமைப் பிரிந்த,

**மரகதம்** (சாரதாதேவி ஏரம்பமூர்த்தி - அல்வாய் மேற்கு - பருத்தித்துறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9354)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

# மனிதனும் வரலாறும்

## 3

இயக்கத்தின் இரகசியத்தை கண்டுபிடித்த ஹேகல், அதனைப் படைத்தலின் சூட்சுமமாகக் கொண்டார். பிரபஞ்சப் பேரான்மாவின் சிருஷ்டிப்பு வித்தையாகக் கண்டார். இதனால் அவரது இயங்கியல் தத்துவம் ஆன்மீக உலகத்தின் சிகரத்திலிருந்தே மனித வாழ்க்கையை நோக்குகிறது. இந்த நோக்கில், மனித வாழ்வும் மனித வரலாறும் தெய்வீகத் திருக்கூத்தாக அவருக்கு தென்பட்டது. இயங்கியலின் மூல விதிகளை நெறித்து, அந்தப் பிரமாதமான கண்டுபிடிப்பை வேதாந்த கருத்துலகில் புதைத்து விடுகிறார் ஹேகல்.

கார்ல் மார்க்சின் எழுத்துக்களில், ஹேகலின் இயங்கியல் விதிகள் பொருளுலகின் எதார்த்த களத்திற்கு கொண்டு வரப்படுகிறது. மெய்யுலகின் இயங்கு விதிகளாக அவை நிறுவப்படுகின்றன.

கார்ல் மார்க்ஸ் ஒரு பொருளியவாதி. பொருளுலகத்தையே மெய்யுலகமாகக் கொண்டவர். பொருளுலகத்திற்கே முதன்மை கொடுத்தவர். பொருளுலகத்திலிருந்தே மனவுலகம் தோற்றப்பாடு கொள்கிறது என்ற கருத்தைக் கொண்டவர். அவரது உலகப் பார்வை ஹேகலின் ஆன்மீக கருத்துலகிற்கு நேர்மாறானது.

ஹேகலின் தரிசனத்தில், வரலாறு என்பது ஒரு தெய்வீக சக்தி. மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி. மனித உலகத்திற்கு அந்நியமான சக்தி. மனிதனுக்கு புறம்பாக நின்று, ஆனால் அதே சமயம், மனித வாழ்வை நிச்சயித்து, நெறிப்படுத்தி, மனிதனுக்கு புலனாகாத ஒரு புனித பயணத்தில், பரிபூரணத்துவத்தை நோக்கிய பரிணாமப் பயணத்தில், மனிதனை வழி நடத்திச் செல்லும் ஒரு சக்தி. இது பிரம்மமாக, பிரபஞ்சப் பேரியக்கமாக, பிரபஞ்ச மனமாக, எங்கும் எதிலும் சர்வவியாபகம் கொண்டு எல்லாவற்றையும் இயக்குகிறது. இது ஒரு இயங்கு சக்தி. சிருஷ்டி சக்தி. இந்தத் தெய்வீக சக்தி இயங்கியல் சக்கரத்தில் சுழல்கிறது. இயங்கியல் விதிகளுக்கு அமைய இயங்குகிறது. இப்படியாக ஹேகலின் தத்துவார்த்த எழுத்துக்கள் இயக்கத்தின் மூல விதிகளை பிரம்ம சூத்திரமாக மாற்றி, அதன் அடிப்படையில் மனித வாழ்விற்கும் வரலாற்றிற்கும் விசித்திரமான விளக்கங்கள் கொடுக்கிறது.

கார்ல் மார்க்சைப் பொறுத்தவரை, மனிதனின் பொருளிய வாழ்வே எல்லாவற்றிற்கும் மூலமானது. மனித மனமும், மனித உறவுகளும், மனித வாழ்வும், மனித வரலாறும் — எல்லாமே மனிதனின் பொருளிய வாழ்விலிருந்து பிரவாகமெடுக்கிறது. இந்தப் பொருளிய வாழ்வின் மூல இயக்கமாகவே இயங்கியலை நிறுவுகிறார் மார்க்ஸ்.

இந்தப் பொருளிய வாழ்வு மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளால் நிர்ணயிக்கப்படுவதல்ல. மனிதனே பொருளுலகத்தைப் படைக்கிறான். மனித செயற்பாட்டின் மூலமே பொருளுற்பத்தி நிகழ்கிறது. இந்தப் பொருளுற்பத்தியில் நிகழும் ஒட்டுமொத்தமான உறவுகளின் கூட்டமைப்பாக பொருண்மியக் கட்டமைப்பு உருவாக்கம் பெறுகிறது. அதுவே, சமூகத்தின் அடித்தளமாக அமைகிறது. பொருண்மிய வளர்ச்சிப் போக்கில், பொருள் உற்பத்தி வடிவங்களில் தோன்றும் மாற்றங்கள் சமூக அமைப்பிலும் மாற்றங்களை நிகழ்த்துகிறது. இந்த சமூக மாற்றத்தை நிகழ்த்திச் செல்லும் மாபெரும் இயங்கு சக்தியாக வரலாறு இயங்குகிறது. பொருண்மிய உறவுகளில் எழும் முரண்பாடும், அந்த முரண்பாட்டைக் களைந்து விட மனிதர்கள் நிகழ்த்தும் போராட்டமும், அந்தப் போராட்டத்தால் நிகழும் சமூக மாற்றமுமாக வரலாறு நகர்கிறது. எனவே, வரலாறு என்பது சமூக மாற்றத்தை நிகழ்த்தும் இயங்கு சக்தி. இது பொருளுற்பத்திக் களத்திலிருந்து எழுவதால் அதனைப் பொருளிய வரலாறு அல்லது வரலாற்றுப் பொருளியம் (HISTORICAL MATERIALISM) என்கிறார் கார்ல் மார்க்ஸ். இந்தப் பொருளிய வரலாற்றை நகர்த்திச் செல்லும் இயங்கு விதிகளாக இயங்கியல் விதிகள் இயங்குகின்றன.

இயங்கியல் பற்றி விளக்கமான ஆய்வுரைகள் எதையும் கார்ல் மார்க்ஸ் எழுதிவிடவில்லை. ஆனால் அவரது தத்துவார்த்த எழுத்துக்களிலும், சமூக பொருண்மிய ஆய்வுகளிலும் இயங்கியல் கருத்தாக்கங்கள் செறிந்து கிடக்கின்றன. இயங்கியலை ஒரு விளக்கக் கோட்பாடாக, ஓர் ஆய்வுக் கருவியாகக் கையாண்டு சமூக மெய்யுண்மைகளை அவர் பிட்டுக்காட்டினார். இயங்கியல் ஆய்வு முறைமையின் (DIALECTICAL METHODOLOGY) ஒருதலைசிறந்த உதாரணமாக அவர்எழுதிய 'மூலதனம்' விளங்குகிறது.

கார்ல் மார்க்ஸ், மனித சமூகத்தை ஒரு முரண்பாட்டுக் களமாகக் கண்டார். அவரது சமூக ஆய்வுகளில் இயங்கியலின் மூல விதியான முரணியம் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

சமூகம் என்பதுதனிமனிதர்களைக்கொண்ட ஒரு பெரிய கூட்டுக் குடும்பம் அல்ல. எல்லா மனிதர்களும் ஒன்று சேர்ந்து ஒத்திசைவாக, ஒன்றித்திருக்கும் ஒரு சுவர்க்க பூமியும் அல்ல. சமூகம் என்பது முரண்பாடுகள் நிறைந்த ஒரு உலகம். வர்க்கம் என்றும் சாதி என்றும், மதம் என்றும், ஏழை என்றும், பணக்காரன் என்றும், ஆளுபவன் என்றும், ஆளப்படுபவன் என்றும், ஒடுக்குபவன் என்றும், ஒடுக்கப்படுபவன் என்றும், சுரண்டுபவன் என்றும், சுரண்டப்படுபவன் என்றும், ஆண் என்றும், பெண் என்றும் மனித உறவுகளில், சமூகப் பிரிவுகளில், எங்கும், எல்லாவற்றிலும் முரண்பாடு தலைதூக்குகிறது. சமூகமானது முரண்பாடுகள் நிறைந்த ஒரு போராட்ட களம். கொந்தளிப்புகளும், நெருக்கடிகளும் நிறைந்த மனித உலகம். இந்த முரண்பாடுகளே சமூகத்தின் அசைவியக்கத்திற்கு காரணிகளாக இருக்கின்றன. இந்த முரண்பாடுகளின் இயல்புகளை இனம்கண்டு கொள்வதன் மூலமே சமூக அசைவியக்கத்தின் தன்மைகளைப் புரிந்து கொள்ளலாம். சமூக அசைவியக்கமாக கட்டவிழும் சமூக வரலாற்றின் போக்கினையும் அறிந்து கொள்ளலாம்.

மனிதர்களின் சமூக வாழ்வைப் பொறுத்தவரை, பொருளாதார வாழ்வே முக்கியமானது. பொருளுற்பத்தியே மனித வாழ்வுக்கு ஆதாரமானது. மனித தேவைகளை நிறைவு செய்வதும் அதுவே. இதனால், சமூகக் கட்டமைப்பில் பொருண்மிய அமைப்பிற்கே பிரதான இடத்தைக் கொடுக்கிறார் கார்ல் மார்க்ஸ். பொருண்மிய அமைப்பே பொருளுற்பத்தியின் மையம். அதுவே சமூகத்தின் திண்ணிமான அடித்தளம். அந்த அடித்தளத்தின் மேற்தளமாகவே மற்றெல்லாம் இயங்குகிறது. பொருளிய வாழ்வே மனவுலகத்தையும் நிர்ணயிக்கிறது. பொருளியப் புறநிலைகளின் வெளிப்பாடாகவே கருத்துலகமும் தோற்றப்பாடு கொள்கிறது.

### பிரம்மஞானி

பொருளுற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில், ஒரு கால கட்டத்தில், உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் மத்தியில் முரண்பாடு எழுகிறது. அந்த முரண்பாடு முற்றி, வர்க்கப் போராட்டம் தீவிரம் பெறுகிறது. சமூகப் புரட்சிக்கான புறநிலை தோன்றுகிறது. இறுதியில், சமூகப் புரட்சி வெடிக்கிறது. இந்தச் சமூகப் புரட்சியால் பொருண்மிய கட்டுமாணத்தில் மாற்றம் நிகழ்கிறது; உற்பத்தி உறவுகளில் மாற்றம் நிகழ்கிறது; சமூக வடிவத்தில் மாற்றம் நிகழ்கிறது. இதனால், புதிய சமுதாயம் பிறக்கிறது. இந்தப் புரட்சிகரமான சமூகமாற்றம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வாக இடம் பெறுகிறது. இந்த வரலாற்று நிகழ்வு சமூகத்தை ஒரு புதிய படிநிலை வளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது. இப்படியாக, கார்ல் மார்க்சின் வரலாற்றுப் பொருளியக் கோட்பாடு, சமூக வரலாற்றுப் போக்கிற்கு விளக்கம் கொடுக்கிறது.

இந்த சமூக வரலாற்றுக் கோட்பாட்டில் சிக்கல்கள் இல்லாமல் இல்லை. இந்தக் கோட்பாடு பொருண்மிய நியதியை (ECONOMIC DETERMINISM)வலியுறுத்துகிறது என்பது சிலரது குற்றச்சாட்டு. அதாவது, பொருளாதாரக் கட்டுமாணமே சமூகத்தின் சகல அமைப்புகளையும், மனித மன உலகத்தையும் நிர்ணயிக்கும் சக்தியாகக் கொள்ளப்படுகிறது. இதில், மனித செயலாக்க சக்திக்கு மேலாக பொருளிய சக்தியே மேலோங்கி நிற்கிறது என்பது இவர்களது வாதம்.

வேறு சிலர், மார்க்சின் வரலாற்றுப் பொருளியத்தை, தொழில் நுட்ப நியதிவாதம் எனவும் விமர்சிப்பதுண்டு. அதாவது, உற்பத்தி சக்தியில் தோன்றும் தொழில் நுட்ப வளர்ச்சியே சமூக மாற்றத்தை நிர்ணயிக்கும் சக்தியாக மார்க்ஸ் சித்தரிக்கிறார் என்பது இவர்களது குற்றச்சாட்டு. உற்பத்தி சக்தி என்பது உற்பத்தி சாதனங்களையும், மனித தொழிலாக்க சக்தியையும் குறிக்கும். உற்பத்தி சாதனங்களில் நிகழும் தொழில்நுட்ப வளர்ச்சியே பொருளுற்பத்தி உலகில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் காரணியாக அமைகிறது. ஆகவே, தொழில்நுட்பத்தில் ஏற்படும் வளர்ச்சியே சமூக மாற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்கும் வித்திடும் உந்துசக்தியாக விளங்குகிறது. எனவே, வரலாற்றின் இயங்கு சக்தியாக தொழில்நுட்பத்தையே கொள்ள வேண்டும் என்பது இவர்களது கருத்து.

இந்த விமர்சனங்களை எல்லாம் மார்க்சீயத்தின் பிதாமகர்களே நிராகரித்திருக்கிறார்கள். லெனினும் இதுபற்றி நீண்ட விளக்கவுரைகள் எழுதியிருக்கிறார். அவற்றின் சாராம்சம் இதுதான்.

பொருளாதார உறவுகளில் எழும் முரண்பாடு பிரதானமானது. ஆயினும் சமூகக் கட்டமைப்பின் பல்வேறு நிலைகளில், பல்வேறு பரிமாணங்களில், முரண்பாடுகள் தோன்றி வளர்கின்றன. சகல முரண்பாடுகளினதும் ஒட்டுமொத்தமான புறநிலை அழுத்தத்தால் புரட்சிகர சூழ்நிலை எழுகிறது. ஒடுக்கப்படும் மக்களே இந்த முரணியங்களின் அழுத்தத்தால் ஈர்க்கப்படுகிறார்கள். சமூகத்தின் பெரும்பான்மையாக, சமூக உற்பத்தியின் படைப்பாளிகளாக விளங்கும் உழைக்கும் மக்களே, புரட்சிகர வர்க்கமாக, புரட்சிகர சக்தியாக செயற்படுகிறார்கள். எனவே, முரணியங்களின் போராட்டகளமாக வர்க்கப் போராட்டம் அமைகிறது. இந்த வர்க்கப் போராட்டமே வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது. வர்க்கப் போராட்டமே சமூகப் புரட்சிக்கும், சமூக மாற்றத்திற்கும் ஏதுவாக இருக்கிறது. வர்க்கப் போராட்டம் என்பது தானாக, தன்னியல்பாக சமூகப் புரட்சியைத் தோற்றுவிப்பதல்ல. வர்க்கப் போராட்டம் என்பது அணி திரட்டப்பட்ட வெகுசன சக்தியாக எழுச்சி கொள்ளும் புரட்சிகர வர்க்கத்தின் போராட்டம். வெகுசனத்தை அணி திரட்டவும், போராட்டத்தை முன் நகர்த்திச் செல்லவும், புரட்சியை நடத்தவும், ஆட்சியைக் கைப்பற்றவும், சமூகத்தில் மாற்றத்தை நிகழ்த்தவும் ஒரு புரட்சிகர இயக்கம் வேண்டும். இந்தப் புரட்சிகர இயக்கமும் அதன் பின்னால் அணி திரளும் மக்களுமே புரட்சியை நடத்த முடியும். வரலாற்றை நகர்த்த முடியும்.

கார்ல் மார்கஸ் ஒரு வரலாற்று ஆசிரியர் மட்டுமன்றி ஒரு சமூகப் புரட்சியாளரும் ஆவார். அவர் சமூக உலகத்திற்கும், வரலாற்றுக்கும் விளக்கக் கோட்பாடுகள் அளித்ததோடு நின்று விடவில்லை. அவர் சமூகத்தை உலகத்தை மாற்றியமைக்க விரும்பினார். முதலாளிய ஒடுக்குமுறையிலும், சுரண்டல் முறையிலும் சிக்குப்பட்டு சீரழியும் மனிதர்கள் விடுதலையடைந்து ஓர் உன்னதமான சமூக அமைப்பைக் கட்டி எழுப்ப வேண்டுமென ஆவல் கொண்டவர். எனவே, அவர் சமூகப் புரட்சி பற்றி எழுதினார். சமூகச் செயற்பாட்டை வலியுறுத்தினார்.

சமூக மெய்மையை, அதன் முரணிய தன்மைகளை, அதன் அசைவியக்கத்தை ஆழமாகப் பார்க்கும் ஆய்வுக் கருவியாக அவர் இயங்கியலைக்கையாண்டார். இயங்கியலில் நெறிக்கப்பட்ட சமூக அறிவியற் கோட்பாடு சமூக நிதர்சனத்தைத் துல்லியமாகக் காட்டவல்லது; சமூக வரலாற்று இயக்கத்தை வெளிப்படுத்த வல்லது, என்பது அவரது கருத்து. விளக்கக் கோட்பாடுகள் சமூக உண்மைகளைத் திரை நீக்கம் செய்து காட்டலாம். ஆனால் செயற்பாடுதான் சமூகத்தை மாற்றியமைக்க வல்லது. ஆகவே, கோட்பாடும், செயற்பாடும் ஒன்றித்து நிற்பதுதான் புரட்சிகர நடவடிக்கைக்கு இன்றியமையாதது என்பது அவரது நிலைப்பாடு.

இயங்கியல் தத்துவத்தின் அடிப்படையில் மார்க்சின் சிந்தனைப் பாரம்பரியத்தை சமூகப் புரட்சிக் களத்திற்கு எடுத்துச் சென்றவர்களில் லெனினும் மாவோவும் முக்கியமானவர்கள். அக்டோபர் புரட்சிக்கு முற்கால ரஷ்ய சமூக அமைப்பை இயங்கியல் கோட்பாட்டின் அடிப்படையில் தெளிவாக விளக்கினார் லெனின். ரஷ்ய சமூகத்தில் அன்று நிலவிய பன்முக முரண்பாடுகளை ஆழமாக எடுத்து விளக்கி, புரட்சிக்கான புறநிலைத் தன்மைகளை அவர் சுட்டிக் காட்டினார். சமூக எதார்த்த நிலைகளை விளக்குவதோடு நின்றுவிடாது சமூக மாற்றத்திற்காக புரட்சிகர வேலைத்திட்டத்தையும் நெறிப்படுத்தி, அதைச் செயற்படுத்தியும் காட்டினார். இதேபோன்று சீன சமூக உலகத்தையும், அதன் முரண்பாட்டுக் கோலங்களையும் மிகவும் துல்லியமாக விளக்கினார் மாவோ. விவசாய வர்க்கத்தின் கட்டமைப்பையும், அந்த வர்க்கத்தில் நிலவிய பிரிவுகளையும், பிளவுகளையும், முரண்களையும் ஆழமாக ஆராய்ந்து, அந்த முரண்களை அகற்றும் செயற்திட்டமாக புரட்சிக்கோட்பாடுகளை அவர் உருவாக்கினார், முரணியம்பற்றி அவர் எழுதியகட்டுரை, இயங்கியல் ஆய்வு முறைக்கு ஒரு தலைசிறந்த விளக்கவுரையாகக் கருதப்படுகின்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவில்
# பிரேமதாசா இல்லாத ஒரு ஆண்டு

ஒரு ஆண்டு காலம் என்பது மனித வாழ்க்கையில் மிகக் குறுகிய ஒரு காலப்பகுதியே ஆகும். அதிலும் குறிப்பாக ஒரு நாடு என்ற வகையில் எடுத்துப் பார்க்கும் போதும் சரி, ஒரு தனி மனிதன் என்ற வகையில் எடுத்துப்பார்க்கும் போதும் சரி ஒரு ஆண்டு காலம் என்பது மிகமிகக் குறுகிய காலப்பகுதியேஆகும். எனினும் பிரேமதாசா இல்லாத ஒரு ஆண்டு ஐ. தே. கவின் ஆட்சிக் காலம் குறுகிய காலம் என்ற வகைக்குள் ஒதுக்கப்பட்டு விட முடியாது, இதற்கு பல காரணங்கள் உண்டு. இவை பற்றி மேலோட்டமாகப் பார்க்கும் முயற்சியே இது

மிகச் சாதாரண குடும்பமொன்றில் பிறந்து, மாநகர சபை உறுப்பினராக அரசியலுக்குள் அடி எடுத்து வைத்து படிப்படியாக உயர்ந்து பத்தாண்டுக் காலம் நாட்டின் பிரதமராகநீடித்து, நான்கரை ஆண்டு காலம் ஜனாதிபதியாகப் பதவி வகித்த ரணசிங்க பிரேமதாசா மறைந்து ஒரு ஆண்டு காலம் அதற்குள் ஓடிப் போய் விட்டது.

ஆனால், அவரது திடீர் மறைவுக்கு பின்னர் பெரும் இடைவெளி ஒன்று ஏற்பட்டுள்ளது என்பதும் கொழும்பு அரசு குழம்பிப்போய் விட்டது என்பதும் இப்போது அம்பலமாகி வருகின்றது.

## திரை மறைவிலிருந்து

அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டுவிட்டதாக அடிக்கடி கூறிக்கொள்ளும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பிரேமதாசா இருந்ததுவரை தமது உதடுகளைப் பெரும்பாலும் இறுக்கமாகவே மூடி இருந்தார். ஆனால் பிரேமதாசா மறைந்ததை தொடர்ந்து படிப்படியாக தமது அபிலாசைகளை வெளியிடுபவராகவும், பிரேமதாசா ஆட்சிக் காலத்தின் குறைபாடுகள் என்று கூறி சிலவற்றை விமர்சிப்பவராகவும் இருப்பதுடன் திரைமறைவில் இருந்துகொண்டு அரசாங்கத்தை இயக்கும் சூத்திரதாரியாகவும் மாறியுள்ளார். குறிப்பாக தம்மால் அழைக்கப்பட்ட இந்திய இராணுவத்தை பிரேமதாசா அவசரப்பட்டு அனுப்பி விட்டதாக பகிரங்கமாகவே குறைப்பட்டுக் கொள்பவராக ஜே.ஆர். ஜெயவர்த்தனா மாறியுள்ளார். அத்துடன் அரசியலையும் யுத்தத்தையும் கலக்கக் கூடாது என்றும், அரசியலில் தோற்றால் எதிர்க்கட்சியாக வரமுடியும், யுத்தத்தில்தோற்றால் ஆறடி மண்ணுக்குள் அடங்கிப் போகத்தான் வேண்டும் என்றும், புதிய தத்துவம் ஒன்றையும் உதிர்த்துள்ளார். மேலும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டு வரும் விரிசல்களையும் பிளவுகளையும் தவிர்த்து கட்சிக்குள் ஒட்டுறவை ஏற்படுத்த முயலும் முக்கிய நபராகவும் இதற்கான செயற் திட்டங்களை திரைமறைவிலிருந்து மேற்கொண்டு வருபவராகவும் அவர் மாறியுள்ளார். இது பிரேமதாசாவின் நினைவாக சென். செபஸ்தியன் வீதிச் சந்தியில் அமைக்கப்பட்ட சிலையை திரைநீக்கம் செய்த வைபவத்திற்கு அவர் தலைமை தாங்கியிருப்பது மூலம் வெளிப்படுகின்றது எனக் கருதமுடியும். ஆக. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் நிலையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்திற்கு பிரேமதாசாவின் மறைவு தான் காரணம் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

## பூ மாலையைப் பெற்ற குரங்கு

குரங்கின் கையில் பூமாலை கிடைத்தால், பூமாலையின் கதி என்னவாகும் என்பது குழந்தைகளுக்கும் புரியக் கூடியது ஒன்றே. 'நான் கனவில் கூட கற்பனை செய்யாத ஒரு அந்தஸ்து, ஒரு பதவி எனக்கு தரப்பட்டிருக்கிறது'' என்று பிரேமதாசாவினால் பிரதமர் நியமனம் வழங்கப் பட்டது பற்றி கருத்து வெளியிட்டவர் டி.பி. விஜேதுங்கா ஒரு வருட காலத்திற்கு மட்டும் என தற்காலிகமாக பிரதமர் நியமனம் பெற்ற போதும் கூட பிரேமாவின் அமைச்சரவையில் தொடர்ந்தும் பிரதமர் பதவியை மட்டுமன்றி, நிதி, பாதுகாப்பு, கல்வி உட்பட பல முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களையும் வகித்து வந்தவர் டிங்கிரி பண்டா விஜேதுங்கா, அந்தளவுக்கு பிரேமதாசாவின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு டி. பி. விஜேதுங்காவிடம் காணப்பட்ட சில சிறப்பம்சங்களே காரணம் எனலாம். கட்சிக்குள் தமக்கென ஒரு அணியைக் கொண்டிருக்காமை, தலைமை மீதானவிசுவாசம், கட்சிக்குள் போட்டியாக வளரக்கூடியவர்கள் எனக் கருதப்பட்டோரை ஓரம் கட்டுவதற்கு பிரேமாவிற்குவழங்கிய ஒத்துழைப்பு என்பன போன்ற பல அம்சங்கள் டி.பி. யிடம் காணப்பட்டன. இந்தச் சிறப்பம்சங்களின்காரணமாகவேஜனாதிபதிப்பதவி அவருக்கு வாய்த்தது. விபத்தாககிடைத்த இப்பதவியைப் பாதுகாத்துக்கொள்ளஅல்லது தக்கவைத்துக் கொள்ள டி. பி விஜேதுங்கா தவறிப்போயுள்ளமையை இந்த ஒரு வருட முடிவு துலாம்பரமாக்கியுள்ளது.

பிரேமதாசா இருக்கும் வரையில் அவரது கொள்கைகள் செயற்திட்டங்கள் பற்றி வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்த டி. பி. விஜேதுங்கா பதவி ஏறியதும் சுருதியை மாற்றிக் கொண்டார். கிராம எழுச்சிக் கொண்டாட்டமான கம்உதாவ நிகழ்ச்சிகளைவீண் செலவு தரும் ஆடம்பரம் எனக்கூறி ஒதுக்கியது முதல், கலந்துரையாடல், கருத்தொருமிப்பு, இணக்கம் என்று பறைசாற்றிய பிரேமதாசாவின் கருத்துக்களை முற்றாக புறக்கணித்துஇனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என முழக்குவது வரை பலவற்றை இந்த வகையில் சேர்த்துக் கொள்ளமுடியும்.

## காமினியின் மறு அவதாரம்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியின் மறு பதிப்பு அல்ல என்றும் சிறிலங்காவின் அரசியலில் சக்தி மிக்க மூன்றாவது அணியொன்றை கட்டி எழுப்புவதே தமது நோக்கம் என்றும் முழங்கிவந்த காமினிதிசாநாயக்க பிரேமா மறைவின் பின்பல குத்துக்கரணங்களை அடித்து இப்போது தமது முகத்தில் தாமே சேறு பூசிக் கொண்டவராகியுள்ளார் லலித் அத்துலத்முதலி இல்லாத ஐ. ஐ. தே. முவும் பிரேமதாசா இல்லாத ஐ தே.கவும் சங்கடங்கள் இல்லாமல் சேர்ந்து கொள்ள முடியும் என்று அரசியல் 'மதியூகிகள்' போட்ட கணக்குகள் தவறானதென்று இப்போது நிருபிக்கப்பட்டு விட்டது நெல்லிக்காய்மூடையை அவிழ்த்துக்கொட்டியது போலாகிவிட்டது காமினி திசாநாயக்க ஐ தே.கவிற்குள் பிரவேசித்த நிலைமை சக்தி மிக்க மூன்றாவது அணியொன்றின் தலைவராகக் கருதப்பட்ட அவர் ஐந்து ரூபாய் கட்டி ஐ தே.கவின் அங்கத்துவத்தை மீண்டும் பெற்ற போதும் மீண்டும் பாராளு மன்ற உறுப்பினர் பதவியையோ அமைச்சர் பதவியையோ பெற்றுக்கொள்ள முடியவில்லை பதவி நலன்களுக்கு பின்னர் தான் அரசியல் வாதிகளின் மக்கள்சேவை என்ற கோசம் மீண்டும் அம்பலமாகிப் போக காமினிதிசநாயக்காபிடித்த கொப்பும் இன்றி மிதித்த கொப்பும் இன்றி திரிசங்கு நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலைமை இந்த ஒரு வருட முடிவின் மற்றுமொரு காட்சி.

## எதிரணியின் எழுச்சி

கடந்த பதினேழு ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டை பரிபாலித்தஐ' தே. கட்சிக்கு பொருத்தமான மாற்றுத் தலைமை இல்லை என்ற கருத்து இப்போது அடிபட்டுப்போயுள்ளது. 'ஜனசவிய', என்றும் 'வீடமைப்புத் திட்டம்' என்றும், இலவச புத்தகங்கள், இலவச சீருடை, இலவச மதிய உணவு என்றும், தனியார் மயப்படுத்தலை மக்கள் மயமாக்கல் என்று மகுடமிட்டும் செயற்படுத்தி வந்த ஐ. தே. கவின் திட்டங்களுக்கு ஈடாக மாற்றுத் திட்டங்களை மக்கள் முன்வைக்க எதிர்க்கட்சிகள் தயாரா என்ற கேள்வி இப்போது அர்த்தமற்றதாகிப் போயுள்ளது. உண்மையில் தேசியப் பிரச்சினைகளுக்கு எதிர்க்கட்சிகளின் கூட்டணியான பொதுசன மக்கள் முன்னணியின் தீர்வு என்ன என்பது தெளிவாக விளக்கப்படாத போதும்ஆட்சியிலிருப்போரின் குறைபாடுகளையும் தவறுகளையும் விமர்சித்து அவர்களின் பலவீனத்தையே மூலதனமாக்க முடியும் என்று எதிரணிகள் நம்புகின்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டுள்ளது. மாற்றம் ஏற்படுவதை மட்டும் விரும்பும் மக்களின் மனப்பாங்கை எதிரணி நன்கு அறுவடை செய்ய முடியும் என்பதையும் இந்த ஒருவருட சம்பவங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

எதிரணியின் முக்கிய பிரமுகரான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா இனப் பிரச்சினை தொடர்பாகவும், யுத்தம் தொடர்பாகவும் வெளியிட்டுவரும் கருத்துக்கள் இந்த முடிவை மேற்கொள்ளவே தூண்டுகின்றன. மாற்று செயல்திட்டம் இருப்பதாகவோ, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணும் அபிலாசை இருப்பதாகவோ காட்டிக்கொள்வதற்கு பதிலாக எதிரணியினர் ஐ தே கவின் குறை குற்றங்களை விமர்சிப்பதையும், புதைகுழிகளை தோண்டுவதிலும், பழிவாங்கப்படும் என்ற முன்னெச்சரிக்கைகளை விடுப்பதையும் தான் நோக்கமாகக் கொண்டுள்ளனர். இந்த ஒரு வருடக் காட்சிகள் இதனையும் வெளிக்காட்டுகின்றன.

இளையவன்

---

# வெளிச்சம் விழும் பொழுது

**வவுனியா திலீபன்**

அங்கே—
இனி—
புதிய வானம்!
புதிய சூரியன்!
புதிய வெளிச்சம்!

புற்களும்
புதிதாக முளைவிடும்!
பறவைகள்
புதிதாக சப்தமிடும்!

நாம்—
கொஞ்சம்
குயில்களை அனுப்பி வைப்போம்
அங்கு—
கூவட்டும்!

கொஞ்சம்
பூக்களை வீசிவிடுவோம்
அங்கு
வாசம் பரப்பட்டும்!

கொஞ்சம்
மேகங்களை அனுப்பி விடுவோம்
அங்கு
பொழியட்டும்!

குயில்களின் இசையில்
பூக்களின் வாசத்தில்
நீர்த் துளியின் சிலிர்ப்பில்
கறுப்பு தேசம் திளைக்கட்டும்!

அங்கு—
எங்கும் இருள்,
கண்ணீர், ரத்தம்
கறுப்பு மனிதன்
மிருகங்களுக்கு ஒப்ப
பார்க்கப்பட்டான்.

மரக்கிளைகள்
முறிந்து வீழ்ந்த மாதிரி
மனிதனின் வாழ்வு.

இது—
மூன்று நூற்றாண்டின்
கண்ணீர்.

சில சம்பவங்கள்
சிரிக்க வைக்கும்;
மேனி—
சிலிர்க்க வைக்கும்!

அலை அறையும்;
காற்று கத்தரிக்கும்!

இனி—
கறுப்பு சிறுவன்
வெள்ளையனுக்கு
விறகு சுமக்க மாட்டான்!
கறுப்புத் தாய் வெறுமையோடு
விழி சிந்த மாட்டாள்!

வீதிகளில், காரியாலயங்களில்,
சந்தைகளில்,
புகையிரத நிலையங்களில்
இனி
மனித முகம் தெரியும்!

வாள்களுக்கு எதிரே
வாழைப்பழம்
எம்மாத்திரம்?

புற்கள்
பூவரசானது.

நெல்சன் மண்டேலா
என்ற
கறுப்புத் தலைவன்
கண்ணீரையல்ல;
ரத்தத்தையல்லவா
நம்பினான்!

தோலின் நிறத்தால்
மனித இனம்
சோகப்பட்டது.
கொடுமை... கொடுமை !

கறுப்பு கை
கவிதை எழுதக் கூடாது என
கட்டளையிடப்பட்டது
அராஜகம்!

உறக்கம்
மனிதனுக்கு
சிறிது நேர மரணம்
என்பது
மெய்தான்!

அந்த இனம்
எழுந்ததால் தான்
விடிந்தது.

எந்த இனமும்
ஒடுக்குவதற்கு உரியதல்ல
என்பதும்
இருள் நிரந்தர மல்ல
என்பதும்
தென்னாபிரிக்கா
எமக்குச் சொன்ன
செய்தி!

கொஞ்சம்
மேகங்களை
அவசரமாக அனுப்பி வைப்போம்!
ரத்த வடு கழுவப்படட்டும்
அந்த மண்ணில்
புதிதாக செடிகள்
முளைக்கட்டும்!

நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

(சிறுகதை)

# சுவடுகள் தொடரும்

காரை - சக்தி

உடலைச் சில்லிடவைக்கிற மார்கழிமாதத்துக் குளிர்! பனிப்புகார்கள் இலைகளோடு உறவாடி பனித்துளி முத்துக்களை முக்குளித்து அவற்றை மண்ணிலே விதைக்கின்றன! மனித உடல்களோடும் மோதுகின்ற குளிர் தசைநார்களைக் கடந்து எலும்புகளை ஆட்டங் காணச் செய்தது-

பனிக்கட்டிகளோடு வாழ்ந்து விட்டு வரும் வீஜிக்கு சொந்த நாட்டின் கனதியற்ற குளிர் ஒருவித சந்தோசத்தை மூட்டியது. நெஞ்சுக்கெதிரே இரு கைகளையும் இறுகக் கட்டியபடி கிடங்கு முடங்குகளில் ஆடி அசைந்தபடி ஓடிச்செல்லும் வாகனத்திற்கேற்ப தன்னுடலும் ஆடுவதை அவன் தனக்குள்ளேயே ரசித்துச்சிரித்தான்! கண்களை வெளியே திருப்பி, அழகு காட்டி ஓடுகின்ற இயற்கைகளின்மீது படியவிட்டான்.

என்ன அழகுமிக்கது எனது தாய்நாடு! இப்படித்தானே எனது கிராமமும்... இல்லை இல்லை! இதனிலும் மிக அழகாக சலசலத்து ஓடும் ஓடைகள், அதனருகே கவிபாடும் சோலைகள், கதிர் சாய்த்து நிலத்தை முத்தமிடும் வயல் வெளிகள் கொஞ்சிப்பேசியே... செவ்வான ஓரத்தை வட்டமிடும் புள்ளினங்கள், இன்னும் எத்தனை...! உம்...! இவையெல்லாம் மீண்டும் கிடைக்குமா?

தவிப்பு நெஞ்சிலே தீக்குழம்பை ஊற்றி வேதனையைத் தருகிறது. அவனையும் மீறி கண்ணீர் நிரம்பின கண்களை மெதுவாகத்துடைத்துவிட்டுக் கொண்டான்-

''என்ன தம்பி, கண்ணிலே தூசு பட்டிட்டுதுபோல...?'' அவனுடைய மௌனத்தை உடைத்து, கதைக்க வழி கிடைத்த மகிழ்ச்சியுடன் பக்கத்திலிருந்தபெரியவர் தொடங்கினார்- அவன் ''இல்லை'' என்பதுபோல் தலையாட்டியதையும் கவனிக்காதவராக அவர் தொடர்ந்தார். 'என்ன செய்யிறது தம்பி! அவன் போடுற குண்டுகளால ஒருபக்கம், மண்ணெண்ணையில முக்கி முக்கி ஓடுற வாகனங்களால ஒரு பக்கம், அவன் சுட்டும் வெட்டியும் சாக்காட்டுற பிணங்கள் உரியவழியில அடக்கம் பண்ணாத்தால ஒரு பக்கம் எண்டு, எங்கட சூழல் பயங்கரமா மாசுபடுகுது தம்பி! உங்க பாரன் எத்தினை வீடுகள் எரிஞ்சும், சிதைஞ்சும் கிடக்கெண்டு! உதுக்கு எத்தின உயிர்கள் பலியான எண்டு தெரியுமே? இப்படித்தான்... பெரியவர்தொடர்கிறார்- அவனது உள்ளமோ ''அம்மா அப்பா'' என்று அலறத் தொடங்கியது. என்னமோ பதினைந்து வருடங்கள் பின் நோக்கிப்போகிறது.

இயற்கையின் எழிலும், இனிய பிள்ளைப் பருவமும் நிறைந்த வயது. ''விஜி'' எனச் செல்லமாக அழைக்கப்படும் விஜய்ராஜ், அவனது பெற்றோருக்கு தவமிருந்து கிடைத்த ஒரே பிள்ளை- அவனது தாய் தந்தை அவன்மீது வைத்திருந்த அன்பு அளவிடற்கரியது! இவனுக்குப் பெற்றோர் மீது உள்ள பாசமோ சொல்ல வேண்டியதுஇல்லை-

இவனின் வீட்டிற்கருகே உத்தியோக நிமிர்த்தம் சாரங்கினியின் குடும்பம் குடிவந்தது சாரங்கினி! அழகில் இவனுக்குச் சளைத்தவள் அல்ல! இவனைவிட வயதில் இரண்டு ஆண்டுகள் குறைவானவள்- இவனைப்போன்றே அவளும் குடும்பத்துக்கு ஒரே பிள்ளை பத்தே வயது நிரம்பிய சாரங்கினியின் பள்ளி வழித்துணைவனான விஜி ஊர் சுற்றிக் காட்டுபவனுமானான்-அதிக வயது வித்தியாசமின்மை இவர்களிடையே அன்புகனிந்த நட்பை உருவாக்கியது: இனிமையான அந்தநாளில்தான் நாட்டில்இனக்கலவரம்வெடித்தது! அது இவர்களின் கிராமத்தையும் விட்டுவைக்கவில்லை.

அன்றும் வழமைபோலவே விடிந்தது- இவனும் சாரங்கினியும் கைகோர்த்தபடி பாடசாலைக்குச் சென்றனர்- வீதியில் ஏற்பட்ட பதற்றத்தைச் கவனிக்கும் நிலையில் அவர்கள் இருவரும் இல்லை: தம்முள் கதைத்துச் சிரித்தபடி சென்ற அந்தச் சிறு உள்ளங்களும் தம்மை ஒரு சோகம் சூழப் போவதை அறியாமலே சென்றன! திடீரென ஒரு குண்டுச் சத்தம்- ட்ரக் வண்டிகளிலிருந்து இராணுவம் குதித்துக்கொண்டிருந்தது- நிலைமையை உணர்ந்த விஜி, சாரங்கினியை இழுத்துக்கொண்டு குறுக்கு வழிகளால் வீட்டை நோக்கி ஓடினான்-

இதோ வீட்டை நெருங்கியாயிற்று! ஆ! என்ன அது அவனின் வீட்டுப்பக்கமிருந்து ஓலங்கள் வருகின்றனவே! அதோ! சாரங்கினியின் அப்பா அம்மா கலக்கம் நிறைந்தவிழிகளுடன் இவர்களை நோக்கி ஓடிவருகின்றனர் தனது தாய் தந்தையைத் தேடிய விஜியின் விழிகள் அவனது வீட்டில் நிலைகுத்தி நின்றன.

அங்கே! அவனது வீடு தீப்பற்றியெரிந்துகொண்டிருந்தது. அதனைச் சூழ காடையர்கள் வெறியாட்டம்போட்டுக்கொண்டிருந்தனர் 'அம்மா அப்பா' என அவன் அலறத் தொடங்கினான்! அவனையும் இழுத்துக்கொண்டு சாரங்கினியின் பெற்றோர்கள் ஓடினார்கள். இவர்களது ஓட்டம்.. பாதுகாப்பெனக் கருதிய காட்டினுள் வந்து நின்றது.

எல்லாவற்றையும் இழந்து இவன் அழுது குழறியபடி சாரங்கினியின் அப்பாவைப் பார்த்தபோது, ''தம்பி இனி உனக்கு எல்லாம் நான்தான் அப்பன். உன்ர அம்மா, அப்பாவை அவங்கள்...அவங்கள்'' தழுதழுத்த குரலுடன் அவனை அவர் இறுகக் கட்டியணைத்தார்.

கடந்தகால நினைவுகளினால் நெஞ்சுக்குள் அழுது கொண்டிருந்தவனின்தோளை தட்டிய பெரியவர்; ''பாத்தியே தம்பி! இப்பிடி எத்தனை பேர் தாய் தேப்பனை இழந்து அநாதைகளாய் நிற்குதுகளெண்டு இதுகளின்ர எதிர்காலம் என்ன?'' நினைவு கலைந்த இவன் வெளியே பார்த்தபோது கந்தல் உடையணிந்த சிறுவர்கள் சிலரைக் காண்கின்றான்- பெரியவர் நாட்டின் அவலங்களைத் தொடர்ந்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்கிறான் ''ஹ்... அவையின்ர எதிர்காலம் என்னவோ? ஆனால் எனக்கொரு எதிர்காலம் இருக்கு எனக்கு வாழ்க்கைத் துணையாக வர என்ர சாரங்கினி, வாழ்த்துத் தந்து வழி காட்ட அவளின்ர அப்பா, அம்மா, இஞ்ஜினியராகி வெளிநாடுகளில் சுளையாக உழைக்கும் என்ர திறமை'' என்ற எண்ணம் அவனுள் நம்பிக்கைகளை ஏராளமாக விதைக்க, அவன் எதிர்காலத்தை வரவேற்பதைப் போலச் சிரித்தான்.

''என்ன தம்பி சிரிக்கிறாய்? வெளிநாட்டிலிருந்து விட்டு வாற உனக்கு எங்கட மண்ணின்ர அவலங்கள் சிரிப்பா இருக்கு என்ன?'' அவனது எண்ண ஓட்டங்களைப் புரியாத அந்தப்பெரியவர் தொடர்ந்தார். ''தம்பி இப்ப இஞ்ச ஏன் வந்தனி எண்டு எனக்குத்தெரியும்! இஞ்ச ஒரு வடிவான பொம்பிளைப் பிள்ளையைப் பார்த்து முடிச்சுக் கொண்டு போகத்தானே? ஓண்டு சொல்லுறன் கேட்டுக்கொள் தம்பி இந்த மண் முன்ன மாதிரி இல்ல இந்த நாட்டுப் பெண்டுகளும், முன்னமாதிரி இல்ல ஓ!''

''இதென்ன விசர்க்கதை கதைக்குது கிழவன்! எனக்காகச் சாரங்கினி காத்திருக்கிறது இந்தக்கிழவனுக்கு எப்பிடித் தெரியும்? மூண்டு வருஷமா இந்த நாட்டுப்பிரச்சினையால எங்களுக்கிடையில் கடிதத்தொடர்பும் இல்ல எண்டபடியால, அவள் துடிச்சுப் போவாள் எண்டு ஓடியாறன்! இவர் விழல்கதை கதைக்கிறார்.'' அவன் தனக்குள் முணு முணுக்கிறான் அவனையும் மீறிகிழவனின் அறியாமையை நினைத்துச் சிரித்தும் விடுகிறான்.

''என்ன தம்பி அப்ப நீ கல்யாணம் கட்ட வரேல்லப் போல, சரி அதைவிடும் போட் ஏறுற இடம் வந்துட்டுது கெதியா இறங்கும் ஓடிப் போவம்''பெரியவரின் வேகம் அவனையும் தொற்றிக் கொள்ளவே சுறுசுறுப் படைகிறான்.

போட் ஏறும்வரை படும் கஷ்டங்கள், அதனையும் மீறி மக்களிடம் காணப்படும் சகிப்புத்தன்மை, புத்துணர்ச்சி, புதுவேகம் எல்லாமே அவனுள் வியப்பையும், சிந்தனையையும் ஏற்படுத்துகின்றன ஒருவாறு போட்டில் இடம் பிடித்து அந்தப் பெரியவரின் அருகிலேயே அமர்கின்றான்

''தம்பி முதலெண்டால் இதால போறது சரியானபயம் இப்ப எங்கட பிள்ளையள் கடற்புலிகள் நிற்கிறதால எங்களுக்கொரு பயமுமே இல்லை அத்தோடை எங்கட பிள்ளையள் பூநகரியில குடுத்த அடிக்குப்பிறகு அவை இஞ்சாலை வாற இல்லை ஓ...''பெரியவர் பெருமிதத்தோடு மெல்லச் சிரிக்கிறார் ''ஓ! நான் வெளிநாட்டுக்குப் போய் எட்டு வருஷமாச்சு... இந்த மண்ணையும் அதின்ர மாற்றத்தையும் அறியாமல், உழைக்கிற திலையும் சொகுசு வாழ்க்கை வாழ்றதிலயும், என்ர காலத்தைக் கடத்திப் போட்டன் இந்த மண்ணில ஒரு முக்கியமான மாற்றம், ஒரு எழுச்சி எழும்பித் தான் நிற்குது?'' அவனால் அதை தெளிவாக இனங்காண முடியவில்லை.

''இம்...! எனக்கென்ன இன்னும் கொஞ்ச நாள் இங்க இருப்பன், திரும்ப சாரங்கினியோட வெளிநாட்டுக்குப் பறந்திடுவன், எனக்கென்னத்துக்கு இதுகளைப் பற்றி'' அவன்தன் இயலாமையை இவ்வாறு எண்ணி தன்னைத் தேற்றிக் கொண்டு மனதை வேறு திசைகளில் திருப்புகின்றான் ஆளையாள் தெரியாத இருட்டு. நட்சத்திரம் மட்டும் அடிக்கடி கண் சிமிட்டுகிறது குளிர்காற்றோடு கடல் தண்ணீயும் உடலை நனைக்கிறது

''தம்பி இந்தக்கடலில்எங்கள க் காக்கிறத்துக்காக எத்தினை பிள்ளையளின்ர உடல் காற்றோடகலந்தது தெரியுமே!மக்களுக்காகஅந்தப்பிஞ்சுகள், எங்கட... எங்கட... குஞ்சுகள்'' பெரியவர்நாத்தளுதளுத்தார்- நீண்டநேர அமைதியின்பின் ஒரு பெருமூச்சை விட்டு அவர் தொடர்ந்தார் ''ஆம்பிள, பொம்பிள, குஞ்சு குருமன் எண்ட பேதமில்லாமஎத்தினை பேரை அந்தக் கயவர் வந்து வெட்டியும், சுட்டும் கொண்டவன்கள்! அவங்களைக் கொண்டு அழிச்சு எங்கட பிள்ளையள் அவங்களுக்கு நல்ல பாடம் படிப்பிச்சிட்டினம் எங்கட குஞ்சுகள் தெய்வங்களாப் போச்சுதுகள். தெய்வ...'' வீரத்தின் வேகத்தைச் சோகத்தின் சாரம் தாக்க, வார்த்தைகளைத் தேடிக்களைத்து மௌனமானார் அந்தப் பெரியவர்-

அவரின் மௌனமே இவனுக்கு ஆயிரம் கதைகளைச் சொல்லுகிறது- அவனிடமும் நீண்ட பெருமூச்சொன்றே பதிலாக வருகிறது! கடல் பயணம் முடிய தரையில் கால் பதிக்கின்றான். எல்லோரிடமும் ஒரு நிம்மதிப் பெருமூச்சு! இவன் போகும் வழியிலேயே பெரியவர் இடமும் அமைந்திருப்பதால் இருவருமிணைந்துஒரு ஓட்டோவைஅமர்த்துகின்றனர் ஒருவான் நிறையககூடியஅளவு அவன் கொண்டுவந்தபொருட்கள் வழியில் இராணுவச் சோதனைச்சாவடியில் தேய்ந்ததால் ஒரு ஓட்டோவினுள்ளேயே அவை அடங்குகின்றன! எவ்வளவு கனவுகளோடு எதிர்பார்ப்புகளோடு ''ஒவ்வொரு பொருட்களக எடுத்துக்கட்டிவந்தேன்- எல்லாம்... வேண்டாம்- இப்ப நான்சாரங்கினியைக் காணப்போறன், மாமா மாமியைப் பார்க்கப் போறன்- அந்தச் சந்தோசம் ஒண்டே போதும்''

ஓட்டோப்பயணம் தொடர்கிறது பெரியவரின் விளக்கங்கள் இந்த மண்ணின் மாற்றத்தை அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியவைக்கின்றன ''உண்மைதான்இந்த பொருளாதாரத் தடையுக்க பஞ்சத்திலயும் பசியிலயும் பாதிச்சனம் செத்திருக்கும் எண்டு நினைச்சன். ஆனா சனம்எப்பிடிநிமிர்ந்துநிற்குது!' என்ர மண் பாரிய மாற்றம் தான் கண்டு நிற்குது' இஞ்ச பாரன் வலு சின்ன வயதுப் பெடியள் கையில துவக்கோட போகுதுகள். அதுகள் எதிரிகளை எதிர்பார்த்து எல்லையில நிற்குதுகள்- அங்கை! வயல்ல உணவு உற்பத்தியில சின்னப் பிள்ளையளும் ஈடுபடுகுதுகள்!'

ஒவ்வொரு காட்சியும் அவனின் இதயத்தில் இடித்தன- ''இவையெல்லாம் சேர்ந்து என்ர நாட்டைக் காப்பாத்த நான்... ஆ! இதென்ன இவ்வளவு பொம்பிளப் பிள்ளையள் துவக்கோட போயினம்? யாழ்ப்பாணத்தின்ர கிடுகுவேலிக் கலாசாரம் எங்கை போட்டுது? சனமும் இதப்பற்றிக் கவலப்படேல்லையே? சீ! நான்தான் மாறெல்ல''
அவன் தன்னுள் வெட்கினான்- தான் இழந்தவைகளை எண்ணி ஏங்கினான். ''இந்த மண்ணிலேயே இருந்திருந்தா இப்ப நானும் தலை நிமிர்ந்து நடந்திருக்கலாம். நாட்டுக்காக பொம்பிளையள் களத்திற்குப் போக நாங்கள்......!''

அவனுள் விடுதலை உணர்வை விதைத்த பெரியவர் விடைபெறுகின்றார். அவருக்கு நன்றியுடன் விடை கொடுத்தான் மேலும் தொடர்ந்த எண்ண ஓட்டம் வீட்டை நெருங்கியதும் தடைபெறுகிறது. புரியாத ஒருவகைப் புத்துணர்வு அவனுள் புகுந்து கொள்கிறது சாரங்கினியிடம் தன்னுள் ஏற்பட்ட அந்த மாற்றத்தைக் கதை கதையாகச் சொல்லத் துடித்தான்.

துள்ளிய மனதை மெதுவாக அடக்கியபடி வீட்டினுள் நுழைந்து ''மாமா மாமி'' என்று குரல் கொடுத்தான் சாரங்கினியின் பெற்றோர் குரல் கேட்டு வெளியே வந்து இவனை அடையாளம் கண்டதும், மகிழ்ச்சியும், ஆச்சரியமும், பாசமும் என பல்வகை உணர்ச்சிகளால் வார்த்தைகள் இன்றித் திக்குமுக்காடினர் பின் வரவேற்பு, வழமையான குசலங்கள், விசாரிப்புகள்......, அவனின் வாய்தான் தன்பாட்டிற்கு அசைந்ததே தவிர, கண்களும், மனமும் சாரங்கினியைத் தேடி அலைந்தன! அவளைக் காணக் கிடைக்காத துடிப்புடன், அவன் தவிப்பதைப் புரிந்து கொண்ட அந்தப் பாச உள்ளங்கள் அதைப் புரியாதது போல நடித்தன.

கடைப்பிடித்த பொறுமையைத் தொடரத் திண்மையற்ற தவிப்போடு ''மாமி! சாரங்கினி எங்க? ஏதேன் படிக்கப் போட்டாவோ இல்ல......' அவன் தொடராது நிறுத்தி விட்டு அவர்களைப் பார்வையால் அளந்தான் சாரங்கினியின் தாயார் ஒரு கடிதத்தை எடுத்து வந்து அவனின் கைகளில் திணித்து விட்டு, கணவரோடு சற்று விலகிச் சென்றார். படபடத்து, நெஞ்சும் துடிக்க கடிதத்தை உடைத்து அவசரமாக வாசித்தான் விஜி

''என்றும் அன்புடன் விஜிக்கு;

உன் சாரங்கினி எழுதிக் கொள்வது, நீ எப்படியும் இந்த மண்ணிற்கு என்னைப் பார்க்க ஓடி வருவாய் எண்டு எனக்குத்தெரியும் அப்பநான் இருப்பனோ தெரியாது. விஜி! உனக்குத்தெரியுமா உன்னைப் போன்ற எத்தனை விஜிக்கள் இந்த மண்ணின் விடிவுக்காக மரணித்துக் கொண்டிருக்கினமெண்டு நாளைக்கு எனக்கும் அந்தநிலை வரலாம் என்னை இழந்து என்னைப் பெத்தவை தவிக்கலாம்! எத்தனையோ இழந்த பின்னும் எங்கட மண் நிமிர்ந்து நிற்குது. இதுக்குக் காரணம் என்ன? இனிவரும் சந்ததியாவது சுதந்திரமா, சுபீட்சமா இந்த மண்ணில வாழவேணும் அதுக்காக நாங்கள் எங்கள ஆகுதியாக்கத் துணிஞ்சிட்டம் எங்களை வழி நடத்த எங்கட அண்ணன் இருக்கிறார். அவற்ற பாதையில நானும் போறன்-

இந்த மண்ணில் இருந்தா, நீ என்ன செய்வாயோ, அந்தக் கடமையை நிறைவேற்றப் போறன். விடியலைத் தேடும் எனது பயணத்தில, நான் வித்தாகலாம், அல்லது முடிவில் திரும்பி வரலாம்!

அன்புடன் சாரங்கினி

அவளது இலட்சியக் கருத்துக்களைக் கிரகிப்பதை விட, சாரங்கினி தன்னை விட்டுப் பிரிந்து விட்டாள் என்ற எண்ணமே மேலோங்க, பித்துப் பிடித்தவனாக கடிதத்துடன் அறையினுள் சென்று, கட்டிலில் விழுந்தான். மீண்டும் மீண்டும் கடிதவரிகளை மனனஞ் செய்தான்!

சூழலின் மாற்றங்கள் அவனைத் துணுக்குற வைத்தன.
(10ஆம் பக்கம் பார்க்க)

# கேடீஸ் தும்புத் தொழிற்சாலை;
# சுய சார்பு பொருண்மியத்தின் முன்மாதிரி

சிறிலங்காஅரசின் நிர்த்தாட்சண்ய பொருளாதாரக் கொள்கை தமிழீழப் பிரதேசத்தில் தொழிலாளரின் வேலை வாய்ப்புகளைப் பெருமளவு குறைத்துள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் தமிழீழத்தில் சுயசார்பு பொருண்மியத்தை நிலை நிறுத்தும் பல தொழிற் சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. தொழிற் துறையில், யாழ் மாவட்டத்தின் தென்மராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் நெஞ்சில் பால்வார்த்திருக்கிறது.கைத்தொழிலிலும்,குடிசைக் கைத்தொழிலிலும் வேலை இழந்தவர்களுக்கு இந்தத் தொழில் நிறுவனம் வேலை வழங்கியுள்ளது. மனித உழைப்பைச் சார்ந்திருக்கும் கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் பதினெட்டுக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டு இயங்குகின்றது இது தென்மராட்சி மக்களின் எதிர்காலம்.

**பொ. இராஜேஸ்வரன் (ஈசன்)**

"ணல் பரப்பு. தென்னந்தோப்பினால் நிழலாக்கப்பட்ட காற்றை அனுபவித்துக் கொண்டு கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனத்தைச் சுற்றிப் பார்த்தோம். இந்த நிறுவனம் மூன்றாண்டினைப் பூர்த்தி செய்துள்ளது. பொருளாதார ஆதாயத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு நிறுவனம் இயங்கவில்லை. சமூக நலனைக் கணகில் எடுத்துக் கொண்டு இந்த நிறுவனம் இயங்குவது நம்பிக்கை ஊட்டுகிறது.

1991ஆம் ஆண்டு முற்பகுதியில் இந்த நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கான முன்வரைவு ஆலோசனைக்கு எடுததுக் கொள்ளப்பட்டது. போரச் சூழ்நிலையிலும், கஷ்டங்களின் மத்தியிலும், அதே ஆண்டு ஆவணி மாதத்தில் நிறுவனம் உற்பத்தியை ஆரம்பித்தது. இந்த நிறுவனம் நுகர்ச்சிப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள்களை உள்ளூரிலேயே பெற்றுக் கொள்கிறது. முடிவுப் பொருள்கள் தமிழ்ப் பிரதேசத்திலேயே சந்தைப்படுத்தப் படுகின்றன. ஒருவராவது தொழில் வாய்ப்பின்றி இருக்கக் கூடாது என்றும், அதே நேரத்தில் சுயசார்புப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதும் கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனத்தின் நோக்கங்களாகும். அத்துடன்பொருள்களை உற்பத்தி செய்வதற்காக மட்டை, ஈர்க்கு ஆகிய பொருள்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் பல கோடி ரூபாய் பணம் தென்னிலங்கைக்குப் போய்ச் சேர்வது தடுக்கப்படுகிறது. ஆரம்பத்தில் ஆறு தொழிலாளர்களை வைத்துக் கொண்டு நடத்தப்பட்ட இந்தத் தொழில் இன்று பெரும் நிறுவனமாக வளர்ந்து பதினெட்டுக் கிளைகளுடன் இயங்குகிறது. போர்க் காலச் சூழ்நிலையிலும் உள்ளூர் மூலப் பொருள்களுடன் ஒரு நிறுவனம் வளர முடியும் என்பதற்கு கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் உயர்ந்த உதாரணமாகும். பதினெட்டுக் கிளைகளிலும் 450க்கு அதிகமான தொழிலாளர் இந்த நிறுவனத்தில் தொழில் செய்கிறார்கள். இதில் விஷேசம் என்னவென்றால், இந்த நிறுவனத்தில் தொழில் செய்பவர்களில் 98 சதவீதமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள், தொழிலினை இழந்தவர்கள் மற்றும் இடம் பெயர்ந்தவர்களும் இதில் அடங்குவர்.

இந்த நிறுவனத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நிறுவனத்தை விரிவுபடுத்தியுள்ளார்கள். கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் தும்பினைப் பதினெட்டுக் கிளைகளுக்கும் அனுப்பி வைக்கிறது. மூலப் பொருளாக தும்பு கேடீஸ் நிறுவனத்திலேயே அடிக்கப் படுகின்றது. தும்பு, கயிறாகவும், கால்மிதியாகவும், மெத்தையாகவும் தும்புக்கட்டையாகவும் கிளைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அத்தோடு பன்ன வேலைப் பொருள்கள் மற்றும் கிடுகும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் சில கிளைகளில் புற்பாய் உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகிறது. நாகர்கோவில், வரணி, முள்ளிவெளி ஆகிய கிராமங்களில் புல் கணிசமான அளவு கிடைப்பதால், சில கிளைகள் புற்பாய் இழைக்கும் தொழிலிலும் காலடி எடுத்து வைத்துள்ளன.

1991 ஆனி மாதத்திலிருந்து இயங்கத் தொடங்கிய இந்த நிறுவனம் சுமார் ஓராண்டு காலமளவு தேக்க முற்றுக் கிடந்தது. போதிய உற்பத்தியை எட்டவில்லை. 1992ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மறுசீரமைப்புடன் ஒரு புதிய இயந்திரத்தைப் பொருத்தியதின் காரணமாக கேடீஸ் தும்புக்கைத்தொழில் நிறுவனம் புத்துயிர் பெற்றுள்ளதைக் கண்ஊடாகக் காணலாம். முன்னைய உற்பத்தியைவிட இரண்டு மடங்கான உற்பத்தியினைச் செய்து நிறுவனத்தை ஸ்திரப்படுத்தியுள்ளார்கள். இதனால் இந்த நிறுவனத்தின் உற்பத்தி இலக்கு முற்றுமுழுதாக நிறைவேறியுள்ளது.

கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனத்தின் ஒரு கிளையாக சாவகச்சேரியிலும் ஒரு தொழிலகம் துவங்கப் பெற்றது. இவ்வகையான கிளை நிறுவனங்களிலிருந்து பெறப்படும் 90 சதவிகிதமான தும்பிலிருந்து தும்புத்தடி, தூரிகை போன்ற பொருள்களே உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்றுகேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனமும் கிளைகளுமாக யாழ் மாவட்ட கயிற்றுத் தேவையில் 60 சதவிகிதத்தினையும், பாய் -30 சதவிகித தேவையினையும், கிடுகு -50 சதவிகித தேவையினையும் உற்பத்தி செய்து ஒரு பெரும் நிறுவனமாகச் செயல்பட்டுவருகிறது.

இந்த நிறுவனத்தில், அதன் ஆரம்பகாலம் முதல் தொழில் செய்யும் திருமதி இராமசாமி அருள்ஜெயந்தியைச் சந்தித்த போது, தனி உற்சாகத்துடன் அவர் கூறினார்;

''எனது கணவன் தோட்ட வேலைக்குப் போவார். எங்களுக்கு மூன்று பிள்ளைகள். இந்த நிறுவனம் தொடங்கிய காலத்திலிருந்தே இங்குதொழில் செய்கிறேன். தும்பு வேலைகளைச் செய்வது எமக்கும் இங்குள்ள மற்றவர்களுக்கும் பழக்கமாகி விட்டது,

(8ஆம் பக்கம் பார்க்க)

## மனிதனும் வரலாறும்...

சமூகம் என்பது சிக்கலான மனித உறவுகளைக் கொண்ட ஒரு புதிரான உலகம். எத்தனையோ எதிர்வு சக்திகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து ஒன்றோடு ஒன்று முரண்பட்டு, அந்த முரண்களின் முகங்கள் தெரியாதவாறு ஒன்றோடுஒன்று ஒன்றித்து நின்று, ஒரு பொய்யான தோற்றப்பாட்டுடன் சமூகம் இயங்குகிறது. இந்தத் தோற்றப்பாட்டிற்கு அப்பால், மறைபொருளாக ஒளிந்திருக்கும் சமூக மெய்யுண்மைகளை இனம்கண்டு அறிவதற்கு இயங்கியல் ஆய்வு இன்றியமையாதது. இதில் முரணிய விதி முக்கியமானது. அதுவே சமூக இயக்கத்தின் இரகசியங்களை வெளிக்காட்ட வல்லது. இந்த முரணியம் ஒருமுகத்தன்மை கொண்டதல்ல; அது பல்முகப் பரிமாணங்களைக் கொண்டது, என விளக்குகிறார் மாவோ.

சிக்கலான வர்க்க உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகத்தில முரண்பாடுகளும் சிக்கலானதாகப் பின்னப்பட்டிருக்கின்றன. இவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக, ஒன்றன் மீது ஒன்று தாக்கம் விளைவிப்பதாக, சமூக இயக்கத்தின் நீரோட்டமாக அசைகின்றன. இந்த சமூக முரண்பாட்டு உலகத்தை பல ரகங்களாக வகைப்படுத்துகிறார் மாவோ. பிரதான முரண்பாடு என்றும், இரண்டாம்தர முரண்பாடுகள் என்றும், பகை முரண்பாடு என்றும்,சினேக முரண்பாடுஎன்றும், சமநிலையற்ற வளர்ச்சிப் போக்குடைய முரண்பாடு என்றும் இவை நிரைப்படுத்தி வகைப்படுத்தப்படுகின்றன. நதிகள் சமுத்திரத்தில் சங்கம்மாவது போன்று, எல்லா முரண்பாடுகளுமே பிரதான முரண்பாட்டைச் சந்திக்கின்றன. அதற்கு முண்டுகொடுத்து நிற்கின்றன. இந்தப் பிரதான முரண்பாடு முக்கியமானது. அது முற்றிக்கனியும்போதே புரட்சிகரப் புறநிலை பிறக்கிறது இந்தப்பிரதானமுரண்பாட்டையும்அதேடுபிணைந்துநிற்கும்ஏனைய முரண்பாடுகளையும் இனம்கண்டுகொள்வதன்மூலமே சமூகஉலகத்தை ஆழமாகத் தரிசித்துக்கொள்ள முடியும் என்கிறார் மாவோ.

முரணியக் கோட்பாட்டை விரிவுபடுத்தி, அதனைச் செழுமைப்படுத்த, மாவோ, லெனின் போன்றோர் நிகழ்த்திய சமூக ஆய்வுகளை உதாரணம் காட்டி, ஹேகலின் இயங்கியலுக்கும் மார்க்சீய இயங்கியலுக்கும் அடிப்படையான, அமைப்பு ரீதியான வேறுபாடுஉண்டு என வாதிக்கிறார் அல்தூசர். ஹேகலின் தத்துவம் கருத்துலகம் சார்ந்தது; ஆன்மீகமயமானது. ஆனால் கார்ல்மார்க்சின் வரலாற்றுடப் பொருளியமானது ஒரு சமூக விஞ்ஞானக் கோட்பாடு; அது சமூக வரலாற்றிற்கு விஞ்ஞான ரீதியான விளக்கத்தைக் கொடுக்கிறது, என்பது அல்தூசரின் வாதம்.

மார்க்சீயத்தை ஒரு வரலாற்று விஞ்ஞானக் கோட்பாடாக நிறுவுவதாயின் கார்ல்மார்க்சின் சிந்தனை உலகிலிருந்து ஹேகலின் 'ஆவியை' விரட்டவேண்டும். அல்தூசரின் தத்துவார்த்த எழுத்துக்கள் இந்தக் கைங்கரியத்தையே செய்ய முனைகிறது. அல்தூசரின் தத்துவம் நவ மார்க்சிய சிந்தனை உலகில் பெரும் சர்ச்சையை எழுப்பியது. இந்தச் சர்ச்சையையும், அதன் வாதப் பிரதிவாதங்களையும் விளக்கிக்கூறுவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. நாம் இங்கு எடுத்துக்கொண்ட விடயம் ஹேகலின்தத்துவமும் அது மார்க்சிய வரலாற்றியலில் ஏற்படுத்திய தாக்கமுமாகும். ஹேகலின் சிந்தனையை மார்க்சீயம் எந்த அளவுக்கு உள்வாங்கியிருக்கிறது என்பது பற்றியே நாம் இங்கு பார்க்கிறோம். இந்தச் சிந்தனை வரம்பிற்குள் நின்றே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

கார்ல் மார்க்சின் சிந்தனையை இரு கால கட்டங்களாகப் பிரித்து. ஒன்றை இளம் மார்க்சின் தத்துவார்த்த எழுத்துக்கள் என்றும், மற்றதை முதிய மார்க்சின் விளக்கக் கோட்பாடுகள் என்றும் இருவகைப்படுத்துகிறார் அல்தூசர். முன்னது கருத்துலகம் சார்ந்தது; பின்னது விஞ்ஞான உலகம் சார்ந்தது; முன்னதில் ஹேகலின் தத்துவப் பிசாசு ஆட்கொண்டிருக்கிறது; பின்னதில் அது விரட்டப்பட்டுவிட்டது. முன்னது தத்துவ விமர்சனம்; பின்னது வரலாற்று விஞ்ஞானம். இப்படியாக மார்க்சின் எழுத்துலகை இரு கூறுகளாகப் பிரித்து, இடையே ஒரு சிந்தனை முறிவு ஏற்பட்டுள்ளதாக வாதாடுகிறார் அல்தூசர்.

இந்த வாதம் வலிமையற்றது. ஏற்றுக் கொள்ள முடியாதது. ஏனென்றால், அல்தூசர் கூறுவது போல மார்க்சின் எழுத்துக்களில் ஒரு அடிப்படையான சிந்தனை முறிவு (EPISTEMOLOGICAL BREAK) ஏற்பட்டதாகச் சொல்லிவிட முடியாது. அவரது எழுத்துக்களில் ஒரு சிந்தனைத் தொடர்ச்சி இருக்கிறது; பரிணாம வளர்ச்சி இருக்கிறது. இளம் பராயத்தில் அவர் தத்துவம்பற்றி எழுதினார். முதிய காலத்தில் பொருண்மியம் பற்றி எழுதினார். ஆயினும் அவரது தத்துவப் பார்வை, உலகப் பார்வை.அவரது முதிர்ந்த கால எழுத்துக்களிலும் ஆழமாக வேர்பதித்து நிற்கின்றன. ஹேகலின் இயங்கியல் இந்தச் சிந்தனைத் தொடர்ச்சிக்கு ஆதாரமாக நிற்கிறது.

ஜேர்மானிய தத்துவம், பிரஞ்சு அரசியல், பிரித்தானிய பொருண்மியம் என்ற ரீதியில், அவர் காலத்திற்குக்காலம், அந்தந்த நாடுகளில் வாழ்ந்தபோது, அந்தந்த நாடுகளின் வரலாற்றுப் புறநிலைகளாலும் சிந்தனைப் போக்காலும் ஈர்க்கப்பட்டு, அந்தந்தத் துறைகள்பற்றி எழுதினார். அவர் எங்கு சென்றாலும், எதனை எழுதினாலும், ஹேகலின் 'ஆவி' அவரைப் பின்தொடர்ந்தது. அந்த 'ஆவி' தான் இயங்கியல் தத்துவம். அது அவரது எல்லா எழுத்துக்களிலும் ஆட்கொண்டு நிற்கிறது.

முதிர்ந்த பருவத்தில் அவர் பிரித்தானியாவில் வாழ்ந்தபோது ஆங்கிலேய பொருண்மிய உலகத்தின் அராஜகப் போக்கு அவரை ஆழமாகப் பாதித்தது. பல வருடங்களை லண்டன் 'மியூசியம்' நூலகத்தில் செலவிட்டு அவர் 'மூலதனத்தை' எழுதினார். புதிதாகப் பொருண்மிய விளக்கக் கோட்பாடுகளைப் படைத்தார். முதலாளிய உற்பத்தி உலகத்தின் முரணிய தன்மைகளையும் இயங்கு விதிகளையும் எடுத்து விளக்கினார். வரலாற்றுப் பொருளியத்தின் அத்திவாரத்தை அமைத்தார். அல்தூசரால் சமூக விஞ்ஞானமாக சித்தரிக்கப்படும் மார்க்சின் வரலாற்றுப் பொருளியமும் இயங்கியல் தத்துவத்தின் அத்திவாரத்தில்தான் கட்டப்பட்டிருக்கிறது. ஆன்மீக மாயையிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட ஹேகலின் இயங்கியல் விதிகளே மார்க்சீய வரலாற்றியலின் தூண்களாக நிற்கின்றன.

(தொடரும்)

நன்றி: வெளிச்சம்

...தீசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் ... நூலகம்

# ஆபிரிக்காவின் பிணக்கிடங்காகிறது றுவாண்டா; திரும்பிப்பார்க்க உலகம் மறுக்கின்றது

மத்திய ஆபிரிக்க நாடான றுவாண்டாவின் தலை நகரமான கிகாலி இன்று பிணங்கள் குவிந்து கிடக்கும் பிணக் கிடங்காக மாறிவிட்டது. பழிவாங்கலின், பகைமையின் வெறுப்பின் மனித சாதனை அங்கு இப்போது படைக்கப் படுகின்றது. கத்திகளாலும், கைக்கோடரிகளாலும் சின்னாபின்னமாக்கப்பட்டுக் கைகால்கள் துண்டாடப்பட்டு தலைகள் சீவப்பட்ட முண்டங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. பிணங்கள் அழுகி நாறுவதால் காற்றில் எங்கும் பிணவாடை மேலோங்குகின்றது. 3 வாரங்களுக்கு மேலாக வீடுகளில் பதுங்கிக் கிடப்போர் பட்டினியாலும் தொற்று நோயாலும் மடியத் தொடங்குகின்றனர். மனித அவலத்தின் உச்சம் ஓலக்குரலாக எங்கும் எதிரொலிக்கின்றது. இத்தகைய கோரத்திற்கு மத்தியிலும் இன்னமும் இரை தேடி சுடுகாட்டு ஓநாய்கள் போல மது வெறியில் கைகளில் கத்தி கோடரியுடன் மனிதக் கூட்டம் வேறு அலைகின்றது. இக்காட்சிகளைக் காண்போர் உடல் விறைத்து, வயிறு குமட்டி, வாந்தியெடுத்து மயக்கமாகின்றனர். சாவிலிருந்து தப்புவதற்காக அண்டைநாடுகட்குக் குறிப்பாக தான்சானியாவுக்கு இலட்சக்கணக்கில் மக்கள் ஓடுகின்றனர். தமது வரலாற்றில் இத்தகைய குறுகிய காலத்திற்குள் இவ்வளவு பெருந்தொகை மக்களைப் பராமரிக்க நேரிடவில்லையென தமது இயலாமையை யு. என். எச். சி. ஆர். விளக்குகின்றது.

றுவாண்டாவில் உழைக்க, அம் மக்கட்கு உதவ, போதிக்க வந்த வெளிநாட்டோர் யாவரும் உயிர் தப்பினால் போதுமென்று வெளியேறி விட்டனர். 2500 பேரைக் கொண்ட ஐ நா. அமைதிப் படையே அச்சம் காரணமாக வெளியேறத் தொடங்குகின்றது, பெயரளவில் 250 பேரை மட்டுமே அங்கு வைத்திருக்கலாம் என ஐ. நா. எண்ணுகின்றது. கொலைகளை சுலபமாக்க எண்ணிக்கையை அதிகரிக்க மக்கள் அதிகமாக குழுமியிருக்கும் இடங்கள் தெரிவு செய்யப்படுகின்றது. தேவாலயமொன்

தாக கூறப்படுகின்றது. இப்படியொரு படுகொலைக் களம் இதுவரை ஏன் உலகின் கவனத்தை பெரிதும் ஈர்க்கவில்லை; இம் மனித அவலம் குறித்து ஏன் உலகம் பாராமுகமாக இருக்கின்றது என்கிற கேள்வி இன்று மனச்சான்றுள்ள மனிதர்களால் கேட்கப்படுகின்றது.

'இருண்ட கண்டம்' என முத்திரையிடப்பட்டு தாம் ஒளியூட்டச் செல்வதாக கூறிச் சென்ற ஐரோப்பியர் விளைவித்த நாசகார செயற்பாடுகளின் விளைவே இத்தகைய நிலைகட்கு பிரதான காரணம் என்பதை மேற்குலகம் வசதிக்காக மறந்து விடுகின்றது. தமது பொருண்மிய நன்மைக்காக 19-ம் நூற்றாண்டின் பின் ஏற்பட்ட கைத்தொழில் மயமாக்கலுக்காக மூன்றாம் உலக நாடுகளின் வளங்களை பங்கிட மேற்குலகம் எடுத்த முயற்சியும் அவற்றின் விளைவாக ஏற்பட்ட உக்கிரமான போட்டியும் இதனால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளும் நாமறிந்ததே. இங்குள்ள அவலம் என்னவென்றால் 16,17-ம் நூற்றாண்டுகளில் குடியேற்ற நாடுகளாயிருந்தவை விடுதலை பெற்றுக் கொண்டிருக்கையில் ஏகாதிபத்திய போட்டியில் கடைசியாக காலம் தாழ்த்தி பங்கு பற்றிய ஜேர்மனி, பெல்ஜியம் போன்றவை 19-ம் நூற்றாண்டின் கடைசிக் கட்டத்தில் கூட ஆபிரிக்காவை தமக்குள் பங்கிட்டது தான். இவ்வாறாகத்தான் 1880-ம் ஆண்டு ஜேர்மனியின் கையில் சிக்கியது றுவாண்டா. மேற்குலகம் ஏகாதிபத்தியப்போட்டியின் உச்சமாக தமக்குள் மோதி உலகப் போர்களை நடாத்திய போது ஜேர்மனியிடமிருந்து பெல்ஜியத்தின் கைக்குறுவாண்டாமாறியது. 20-ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை பெல்ஜியத்திற்கு றுவாண்டாவை கைவிட மனம் வரவில்லை.

எனினும் ஒருவாறாக பெல்ஜியம் 1962ஆம் ஆண்டளவில் றுவாண்டாவை விட்டு வெளியேறியது. இவ் வெளியேற்ற கால கட்டத்திற்கு சற்று முன்னதாக கூட்டு, துட்சி இனக்

வும் திகழ்ந்தனர். ஆனால் புதிய சனநாயக ஆட்சி முறையில் எண் கணக்கைக்காட்டி தாம் நசுக்கப்படுவதை- அடக்கப்படுவதை அவர்கள் ஏற்கத் தயாராகவில்லை. எனவே மோதல்கள் வெடிக்க இலட்சக்கணக்கில் துட்சி இனமக்கள் கொல்லப்பட, றுவாண்டாவில் எதிர் விளைவுகள் தோன்றின. துட்சி இனமக்கள் தமக்குஆதரவான உகண்டாவின் உதவியோடு R P. F. எனப்படும் றுவாண்டா தேசப்பற்றினர் முன்னணி ( Rwandan Patriotic Front ) என்கிற ஒன்று பற்றியும் கனரக ஆயுதங்களும் தாங்கிய போராளி அமைப்பினை உருவாக்கினர். அதேசமயம் பெரும்பான்மை இன கூட்டு இன ஆட்சி 1973ஆம் ஆண்டு நடந்த இராணுவ முயற்சியொன்றின் மூலம் கூட்டு இன இராணுவ ஆட்சியாகியது. அப்போதே காபியாரிமான ( Hapyarimana ) சனாதிபதியானார். இதைத்தொடர்ந்து நிலைமைகள் மோசமாகின. 1990ஆம் ஆண்டளவில் உகண்டாவினது துட்சி இனப் போராளிகள் தாயகம் திரும்பி தமது முனைப்பான போராட்டத்தை தொடங்கினர். அதன் விளைவுகளே இன்றளவும் தொடர்கின்றது.

பெரும்பான்மையாக இருந்தாலும் குறைந்தளவு இராணுவத்தையே கொண்டிருந்த காபியாரிமானாவின் ஆட்சி இக்கட்டான நிலையை எதிர் நோக்கியது தனது சிக்கலைத் தீர்க்க ஐ. நா.வின் உதவியை நாடினார் புதிய உலக ஒழுங்கில் தனது புதிய நிலைப்பாட்டிற்கு கிடைத்த வரவேற்பாக இதனைக் கருதி ஐ. நாவும் ஆழம் தெரியாமல் காலை விட சம்மதித்தது. ஏற்படுத்தப்பட்ட உடன்பாடொன்றின்படி போர் நிறுத்தமொன்று கடந்த வருடம் ஏற்படுத்தப்பட்டு அதனைக் கண்காணிக்க 2400 பேரைக்கொண்ட அமைதிப்படை அனுப்பவும் தலைநகர் கிகாலியில் துட்சி இனப் போராளிகள் சில 100 பேர் தரிக்கவும் ஏற்பாடாகியது. இதைத்தொடர்ந்து தான்சானியாவில் கடந்த ஆகஸ்ட்டில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி அரசியல்

**...குமாரன்**

அதிகாரத்தை பங்கிடவும் ஓர் உடன்பாடு இரு இனத்தவரிடையேயும் ஏற்பட்டது. எனவே அமைதி நிலவியஇக் குறுகியகாலகட்டத்தில் துட்சி இனத்தைச் சேர்ந்தவர் பிரதம மந்திரியாகவும், உகண்டாவினில் குடியேறிய பல துட்சி இன முக்கியத்தர்கள் கிகாலி திரும்பவும் வழியேற்பட்டது. இருந்தபோதும் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது இழுத்தடிக்க - ஏமாற்ற காபியாரிமானா முயலவே, மீண்டும் மோதல்கள் வெடித்தன. மீண்டும் தான்சானியாவில் இது தொடர்பாக கூட்டப்பட்ட பேச்சு வார்த்தைக்கு சென்று விட்டு திரும்பும்போதுதான் கிகாலிக்குஅண்மையில்சென்ற மாதத் தொடக்கத்தில் காபியாரிமானாவும் புரூண்டியின் கூட்டு இன சனாதிபதி சைப்ரியன் எண்டரியாமராவும் பயணித்த (Cyprien Ntaryamira) விமானம் சுட்டு வீழ்த்தப் பட்டது.

இரு சனாதிபதிகளும் இறக்கவே பெரும் குழப்பம் வெடித்தது. புரூண்டியின் துட்சி

இனத்தவர் கையிலே இராணுவம் இருப்பதால் பெரும் கலவரம் தோன்றாமல் தடுக்கப்பட்டு விட்டது. ஆனால் றுவாண்டாவிலோ பல்வேறு வதந்திகள் பரவியது. துட்சி இனப் போராளிகளே விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக முதலில் செய்திகள் தெரிவித்தன. ஆனால் பின்னர் சனாதிபதி காபிரியாரிமானாவின் விட்டுக்கொடுக்கும் போக்கு பிடிக்காமல் துட்சி இனத்தவர் பதவி பெறுவதை, திரும்

என்பது இன்னொரு கதை. றுவாண்டாவில் மனிதாபிமான பணிகளை மிக நீண்ட காலமாக மேற்கொண்டு வரும் பிரித்தானிய ஒக்ஸ்பாம் ( Oxfarm ) அமைப்பு றுவாண்டாவில் நடப்பது இனப் படுகொலை ( Genocive ) என்றும் துட்சி இன மக்களே பெருமளவு இவ்வாறு கொல்லப்பட்டனர் என்று கூறியுள்ளது. பூட்ரோஸ் காலியோ மனித வரலாறு காணாதஅவலம் என்கிறார். ஆனால்உலக

> இப்போது ஆபிரிக்காவின் படுகொலைக் களமாக இன்னொரு கம்போடியாவாக றுவாண்டா வருணிக்கப்படுகின்றது. 1970 களின் கம்போடிய படுகொலைகட்கு பின் உலக வரலாறு காணாத படுகொலைகள் இங்கு நிகழ்வதாகவும் இவை நிச்சயமாக இனப்படுகொலை என்றும் சருவதேச மனிதாபிமான அமைப்பான ஒக்ஸ்பாம் ( Oxfarm ) கூறுகின்றது. ஆனால் கறுப்பர்கள் தமக்குள் மோதி அழிந்தால் அது உலகின் கவனத்தை ஈர்க்காதா? அவர்கள் மனிதர்கள் இல்லையா? இவர்கள் தோல் வெள்ளையாக இருந்திருந்தால் உலகம் இவ்வளவு அசட்டையாக இருக்குமா? என்று நடுநிலை அரசியல் ஆய்வாளர் கேள்விமேல் கேள்வி எழுப்புகின்றனர். இது மேற்குலகினதும் ஐ. நா வினதும் ஒரு புதிய வகை இனவாதம் என்று அவை கண்டனம் தெரிவிக்கின்றன.

பவும் உகண்டாவில் வந்து குடியேறுவதை (றுவாண்டா மிகப்பெரிய நாடு -சன அடர்த்தி மிகக்கூடியது - நிலப்பற்றாக்குறை அங்கு பிரதான சிக்கல் ), போன்றவையை பிடிக்காத கூட்டு இராணுவத்தினரின் ஒரு பகுதியேஇதனை செய்ததாகவும் கூறப்படுகின்றது. கூட்டு இனத்தவரோ ஐ. நாவின் பெல்ஜியபடைகள் உதவியோடு துட்சி இனத்தவர் இதனை மேற்கொண்டதாக கூறி பெரும் பழிவாங்கலை துட்சி இனமக்கள் மீது மேற்கொண்டனர். துடசியின பிரதம அமைச்சரைக் கொன்றதோடு11பெல்ஜிய படைவீரர்களையும்கொன்றனர். பெல்ஜிய படைகள் மேல் இராணுவத்தினரின் பெரும் கோபம் பெருகவே ஐ.நா அமைதிப்படையிலிருந்த1,100பெல்ஜிய படையினரும் உடனே திருப்பி அனுப்பப்பட்டனர். தனது மக்கள் கொல்லப்படுவதை உலகம் தடுக்காத நிலையில் பெரும் முனைப்புடன் போராடும் துட்சிஇனR P.F போராளிகள் இப்போது வெற்றி முகத்தில் உள்ளனர் நாட்டின் மூன்றில் இரண்டு பகுதி அவர்களிடம் வீழ்ந்து விட்டது. கிகாலி விரைவில்அவர்கள்கைக்கு வந்துவிடும். இதன்மூலமேஇப்படு கொலைகள் நிறுத்தப்பட முடியும் என்று கருதப்படுகின்றது. இவர்கள் பதவிக்கு வந்த பின் தாம் கொல்லப்படுவோம் எனக்கருதி கூட்டு இனமக்கள் தான்சானியாவிற்கு இப்போது தப்பி ஓடுகின்றனர். ஆனால் அவ்வாறு பழிவாங்கோம் என போராளி தலைவர் கூறியுள்ளார் இவர்கள் கட்டுப்பாட்டு பகுதிக்குள் சென்று வந்த செய்தியாளர்களும் துட்சி போராளிகள் கட்டுப்பாட்டுடனும் படுகொலைகளில் ஈடுபடாமலும் ஒழுங்காக இருப்பதாக கூறுகின்றனர்.

இது இற்றை வரையான றுவாண்டாவின் அவலக் கதை. றுவாண்டாவின் இன்றைய நிலை குறித்து ஐ.நா. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் என்ன நினைக்கின்றது? என்ன செய்கின்றது?

சமூகம் இப் படுகொலைகளை தடுக்க என்ன செய்கின்றது? ஐ.நாவின் பாதுகாப்பு சபைக்கு றுவாண்டாவிற்கு மேலதிக படைகளை அனுப்ப பரிந்துரைத்தபூட்ரோஸ் காலியின் அறிக்கை ஏற்கப்படவில்லை. தலையிட மறுத்தபாதுகாப்பு சபை இருக்கும் படைகளையும் திரும்பப்பெறுவது என்றே முடிவு எடுக்கின்றது. அமெரிக்காவோ இந்தப்பழம் புளிக்கும் என்ற பாணியில் தனது ஒரு படை வீரனைக் கூட றுவாண்டா அனுப்ப தயாரில்லை என்று கூறிவிட்டது. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது என்பது அமெரிக்காவிற்கு பொருத்தமான பழமொழியாகிவிட்டது.

இப்போது உலக நீதிமானாக இருந்த சனாதிபதி கிளின்டனின் நிலைபெரும்இக்கட்டில்: உள்நாட்டில் மோசடி குற்றச்சாட்டு, வெளிநாட்டு கொள்கையோ தடுக்கிவிழும் நிலையில்; சோமாலியாவில் கௌரவப் பின்வாங்கல், பொசுனியாவில் விமானக் குண்டு வீச்ச இராச தந்திரம் பலனளிக்காமை, ஈராக்கிலோ குர்திசு மக்களை பாதுகாக்க எடுத்த முயற்சிகளில் அண்மையில் இரு அமெரிக்க உலங்கு வானூர்திகளையும் அதிலிருந்த அமெரிக்க நேச அணி படை வீரர்களையும் அமெரிக்க போர் விமானங்களே தவறுதலாக சுட்டு வீழ்த்தியமை பெரும் சிக்கலை ஏற்படுத்தியமை என இருக்கும் நிலையில் றுவாண்டாவில் தலையிடகிளின்டன்விரும்பவில்லை.

இப்போதுஎழும் கேள்விகறுப்பின மக்கள் தமக்குள்மோதினால் அது உலகின் கவனத்தை ஏன் ஈர்க்கவில்லை? சென்றவருடம் புரூண்டியில் 1இலட்சம்பேர் லைபீரியாவில் ஒன்றரை இலட்சம், அங்கோலாவில் 1இலட்சம்,இப்போது றுவாண்டாவில் இரண்டு இலட்சம் -இறந்தவர்கள் மனிதர் இல்லையா? ஏன் இந்த இரட்டைப்போக்கு என இப்போது அரசியல் அறிஞர்கள்கேள்வி

[10ஆம் பக்கம் பார்க்க]

# இந்தியாவினை அச்சுறுத்தும் சீனாவின் இராணுவ பலம்

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில்கட்டுப்பாடு எல்லைக் கோடு பற்றி அண்மையில் உடன்பாடு செய்துகொள்ளப்பட்ட போதிலும் கூட இந்தியாவுக்கு முக்கிய சவாலாக சீனா உள்ளது என இந்திய விமானப்படைத் தளபதி எஸ். கே. கவுல் தெரிவித்துள்ளார். ஆசியாவில் உள்ள எந்த நாடும் சீனாவின் பிரமாண்டமான ஆயுதபலம் குறித்து அசட்டையாக இருந்து விட முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மிக உயர்ந்த வீதத்திலான பொருளாதார வளர்ச்சியுடனும் நிலை நிறுத்தப்படும் இராணுவ திட்டத்துடனும் சீனா ஆசியாவில் உள்ள மிக சக்திவாய்ந்த இராணுவ நாடாக எழுந்து நிற்பதை சுட்டிக் காட்டிய அவர் இந்த திடமான சவாலுக்கு முகம் கொடுக்க உறுதியான யுத்த தந்திரமொன்று உருவாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். இந்தியாவும் சீனாவும் ஏறக்குறைய 4056 கிலோமீட்டர் நீளமான மலைப்பாங்கான எல்லையைக் கொண்டுள்ளன. தீர்வு காணப்படாத இந்த எல்லைப் பிரச்சினையாக 1962 ஆம் ஆண்டில் இரு நாடுகளிடையிலும் போர் மூண்டது. கிழக்குப் பகுதியில் தான் உரிமை கோரிய எல்லா மலைப் பிரதேசங்களையும் சீனா கைப்பற்றிக் கொண்டது மேற்குப் பகுதியில் கேந்திர முக்கியத்துவம் உள்ள பகுதி ஒன்றைத் தவிர ஏனைய பகுதிகளில் இருந்து பின்னர் சீனா விலகிக் கொண்டது.

கடந்த 30 ஆண்டுகளில் 1967 இலும் பின்னர் 1986-87 இலும் தவிர இரு தரப்பும் கட்டுப்பாட்டு எல்லையை தாண்டியது கிடையாது ஆசியாவில் உள்ள இவ்விரு பெரிய நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பெரும்பாலும் மூன்று தசாப்தங்களாக முடங்கியிருந்த பின்னர் கடந்த ஆண்டு இறுதியில் எல்லை தொடர்பாக ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இரு தரப்பும் பரஸ்பரம் ஏற்கக்கூடிய எல்லைக் கோட்டை வரையறுக்கும் நடைமுறையை ஆரம்பிப்பதற்கானதாக அந்த உடன்பாடு அமைந்தது.

எல்லைப் பிரச்சினைக்கு புறம்பாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே கருத்து மோதலுக்கு வழி வகுத்துள்ள மூன்று முக்கிய விடயங்கள் உள்ளன இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சல் பற்றியது முதலாவது அருணாச்சல் பிரதேசம் தனக்கு உரியது என சீனா உரிமை பாராட்டுகின்றது. ஓரளவு சுதந்திரம் பெற்ற முன்னாள் சிக்கிம் ராஜ்யம் பற்றியது இரண்டாவது சிக்கிம் இந்தியாவுடன் ஒன்றிணைக்கப்பட்ட போதிலும் அது சீனாவினால் அங்கீகரிக்கப்படவில்லை திபெத் சமயத்தலைவர் தலாய்லாமா இந்தியாவில் இருக்க அனுமதிக்கப்பட்டிருப்பது சினமூட்டும் மூன்றாவது விடயம்

இவற்றில் சிக்கிமை இந்தியாவின் மாநிலமாக அங்கீகரிக்க சீனா தயாராகி வருவதாக இப்போது கூறப்படுகிறது. அமெரிக்க செனட்டரான பிரெஸ்லர் அண்மையில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் விஜயம் செய்தார். தெற்காசிய பிராந்திய பாதுகாப்பில் சீன காரணியால் ஏற்படுத்தப்பட்டுள்ள பெரும் பிரச்சினை குறித்து இரு நாடுகளின் தலைவர்களையும் அவர் எச்சரித்தார் கெடுபிடிப் போர் முடிவுற்றிருப்பினும் சீனாவின் பாதுகாப்புச் செலவு கடந்த நான்காண்டுகளில் 50 சதவீதத்தால் உயர்ந்துள்ளது

ஆசிய கேந்திர மதிப்பீடு தகவலின்படி 1992 ஆம் ஆண்டில் சீனாவின் பாதுகாப்புச் செலவு 22 23 பில்லியன் அமெரிக்கடாலர்களை எட்டியுள்ளது. இந்தியாவின் செலவு 6.09 பில்லியன் அமெரிக்க டாலர் சீனாவின் வளர்ந்து வரும் இராணுவப்பலம் தெற்கு ஆசியாவைக் காட்டிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே தான் கூடுதல் கவலையை ஏற்படுத்தியுள்ளது. ஸ்பெரட்லீஸ் தீவுகள் மீதும் தென் சீனா கடலில் உள்ள ஏனைய தீவுகள் மீதும் சீனா தனிப்பட்ட உரிமைகோரிவருவதை சுட்டிக் காட்டலாம்.


**காவேரி சீயாக்காய் பவுடர் வாங்கும் வர்த்தகர்களுக்கு**

**முக்கிய அறிவித்தல்**

ஆரம்பத்தில் காவேரி சீயாக்காய் பவுடரை சைக்கிளில் விற்பனை செய்த விற்பனையாளர் தற்போது வேறு சீயாக்காய் பவுடரை காவேரி சீயாக்காய் பவுடர் என்றும், பெயர்தான் மாற்றம் என்றும் விற்பனையில் மோசடி செய்து வருவதாகப் பல வர்த்தகர்கள் எமக்கு முறையிட்டார்கள். ஆகையால் நீங்கள் வாங்கும் சீயாக்காய் பவுடர் பக்கற் காவேரிதானா என்று லேபிலை அவதானித்து வாங்கவும்

பாவனையாளர்களுக்கும் இதனை அறியத்தருகிறோம்

**காவேரியின் தரம் நிரந்தரம்**

**கந்தசாமி அன் சன்ஸ்**

**இல 15, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.**

(8206)



**சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம். சாவகச்சேரி**

**வாடகை லொறி பெறுவதற்கான கேள்விக்கூற்று பெறல்**

மேற்படி எமது சங்கத்தில் பின்வரும் இடங்களில் சேவை புரிவதற்கு விரும்புபவர்களிடம் இருந்து கூறு விலை கோரப்படுகின்றது. விரும்புவோர் 16-05-1994 க்கு முன்னதாக நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் ' பொதுமுகாமையாளர்,ப.நோ. கூ. சங்கம், சாவகச்சேரி'' என்றமுகவரிக்கு தமது விண்ணப்பத்தை அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

1 சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் - பருத்தித்துறை துறைமுகம்

2. சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் - யாழ். களஞ்சியம் யாழ்ப்பாணம்.

3. சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் - கோண்டாவில் களஞ்சியம்

4. சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்-கிளை நிலையங்கள்

குறிப்பு:- சகல கிளை நிலையங்களும் சங்கத்தில் இருந்து 05 கிலோ மீற்றர் தூரம் வரையில் உள்ளது

பொதுமுகாமையாளர்
சாவ. ப. நோ. கூ. சங்கம்
சாவகச்சேரி.

03-05-1994

(சி-9347)



'24 மணித்தியாலம்' புகழ் 'நீலவண்ணன்' எழுதும்,

**“ இறுதி யுத்தம் ”**

வரலாற்றுத் தொடர் சித்திரம்
இந்த இதழில் ஆரம்பமாகிவிட்டது!

**புதினம்** முதல் இதழ் விற்பனையாகிறது!

(8205)


# கேடீஸ் தும்புத் தொழிற்சாலை

பயிற்சியால் வேலை சுகமாகவே இருக்கிறது. கஷ்டமான வேலை என்று நாம் கருதவில்லை. இப்படியொரு தெங்குப் பொருள் தொழிற்சாலையை அமைத்துள்ளது பெருமைக்குரிய விஷயம்.

''எட்டு மணித்தியால வேலை. நாளொன்றுக்கு 75 ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் 4 மணித்தியாலம் மேலதிக வேலை செய்யலாம். மேலதிக வேலைக்கு சம்பளம் தரப்படுகின்றது. மாதத்தில் குறைந்தது 22 நாள்கள் வேலை கிடைக்கும். நாள் சம்பளம் தான் வழங்கப்படுகிறது.மேலதிக வேலையையும் சேர்த்து மாதாந்தம் 2000 ரூபாவுக்கு குறைவில்லாத வருமானம் கிடைக்கும்''

கணவனை இழந்த நா. சோதிப்பிள்ளை - '' கணவனை இழந்து மூன்று வருடங்கள். எனக்கு ஐந்து பிள்ளைகள், நான்தான் இந்த நிறுவனத்தில்தொழில்செய்து குடும்பத்தினை நடாத்தி வருகின்றேன்'' என்றார்.

கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனத்தின் மேற்பார்வையாளர் திரு. யசோவை நாங்கள் சந்தித்தபோது தொழில் நுட்பம், நிர்வாகம் செயற்திட்டங்களைப் பற்றி விளக்கம் தந்தார்.

இத்தொழிற்சாலையில் ஆறு அடி ஆழத்தில் சதுரவடிவமான தொட்டி ஒன்று உள்ளது. நான்கு லோட் பொச்சு மட்டையை இந்தத் தொட்டியில் நான்கு நாள்கள் ஊறவிட்டு பின்னர் இயந்திரத்தால் தும் பாக்கப்படுகிறது. அடுத்து தும்பு தரம் பிரிக்கப்படுகிறது. தரம் ஒன்று தும்பு கயிறு திரிப்பதற்கும், தரம் இரண்டு தும்பு மெத்தை, தும்புத்தடி, கால்மிதி செய்வதற்கும், தரம் மூன்று கழிவுத் தும்பு தென்னை மரங்களுக்குப் பசளையாக இடப்படுகின்றது. பசளை ஒரு பரீட்சார்த்த முயற்சியாகவே செய்யப்படுகிறது. தும்புப் பசளை பயன் தருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். காய விடப்பட்ட தும்பு நிறுத்துக் கட்டப்பட்டுக் கிளைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

இந்நிறுவனத்தில் ஆண்களும், பெண்களும் வேலை செய்கிறார்கள். பெண்கள் தான் கூடிய அளவு தும்பு அடிக்கும் இயந்திரத்தை இயக்கி வருகிறார்கள். ஆண்கள் அதிகமாகவெளிவேலைகளில்-மட்டை சேகரித்தல், தரம் பிரித்தல் வேலைகளில் ஈடுபடுகிறார்கள்.

இங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் எல்லோருக்குப் தும்பு சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளும் தெரிய வேண்டும் என்பதே இந்நிறுவனத்தின் நோக்கம்.தொழிற்பிரிவினை என்பது இல்லை. காரணம், ஒரு பகுதியினருக்கு ஒரு வேலைதான் தெரியும் என்றால், அந்தப் பகுதியினர் திடீர் விடுப்பில் நின்றால், அந்தப் பகுதி ஸ்தம்பித்து விடக்கூடாது. எல்லோருக்கும் எல்லாம் தெரிந்தால் தொழில் தங்குதடையின்றி நடைபெறும் என்று நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். இந்த நிறுவனத்தில் இரண்டு ஷிப்ட்களில் வேலை நடை பெறுகிறது. காலை 6 மணியிலிருந்து பி. ப. 2 மணி வரை ஒரு ஷிப்ட். 12 மணியிலிருந்து இரவு 8 மணி வரை ஒரு ஷிப்ட்.

தென்மராட்சியில் கிராமப்புறங்களில் கேடீஸ் நிறுவனத்தின் கயிறு திரிக்கும் நிலையங்கள் உள்ளன. இவற்றில் அதிகமாகப் பெண்கள்தான் வேலை செய்கிறார்கள். கேடீஸ் தும்புக்கைத்தொழில் நிறுவனத்தின் பதினெட்டுக் கிளைகளிலும் 90 கயிறு திரிக்கும் பொறிகள் உள்ளன. ஒரு பொறியில் மூன்று பேர் வேலை செய்யலாம். சராசரி ஒருவர் நாளொன்றிற்கு மூன்று கிலோ கயிறு திரிக்கிறார். ஒரு கிலோ கயிறு திரிப்பதற்கு 24 ரூபா. இந்த வகையில் ஒருவர் நாளொன்றுக்கு 72 ரூபா சம்பாதிக்க முடியும்.

தென்மராட்சிப் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்பவர்களுக்கு தென்னை ஓலை வழங்கப்படுகிறது. அங்குள்ள வேலை வாய்ப்பற்ற பெண்களுக்கு தொழில் வழங்கும் நோக்குடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. கிடுகின் சந்தை விலையில் அரைப்பங்கு அவர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்படுகின்றது. அன்றாட அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்தக் கொடுப்பனவு உதவுகின்றது.

கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் தனக்கென ஒரு தலைமைக் காரியாலயத்தைக் கொண்டு இயங்குகிறது. தலைமைக் காரியாலயத்தில் வேலை செய்பவர்களின் சம்பளம் 1300 ரூபா முதல் 3000 ரூபா வரை உள்ளது. தும்புத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்களும் போதனாசிரியர்களாகக் கடமை புரிகிறார்கள்.

கிளைகளிலிருந்து உற்பத்திப் பொருள்கள் தலைமைக் காரியாலயத்திற்குக்கொண்டு வரப்படுகின்றன. இங்கிருந்து யாழ் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது. கடனடிப் படையில் பொருள்கள் மொத்த வியாபாரிகளுக்கு வழங்கப்படுகின்றன.

மூலப்பொருள், மனித வளம் ஆகியன எம்மண்ணில் உண்டு. இவற்றைக்கொண்டு தமிழீழத்தில் சுயசார்புப்பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதினை கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் கோடிகாட்டுகிறது.

# சிறிசேனகூரேயிடம் ஐ. தே. க. செயலாளர் பதவி; தேடிவந்து நிர்ப்பந்தத்தில் போனது

ஐக்கிய தேசியக் கட்சியின்பொதுச் செயலாளர் பதவியில் இருந்து அமைச்சர் கூரே வெளியேறியதை நாகரிகமாகக் கூறுவதானால், இராஜினாமா என்று கூறலாம். உண்மையைக் கூறுவதானால் நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் வெளியேற்றப்பட்டார் என்றே கூறலாம். ஆனால், கூரேயின் வெளியேற்றமானது ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா - கூரே ஆகியோருக்கு இடையிலான தனிப்பட்ட முரண்பாடா? அன்றி ஜனாதிபதி டி பி. விஜேதுங்காவிற்கும்-முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அணியினருக்கும் இடையிலான முரண்பாடா? முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர்: ஜெயவர்த்தனா - பிரேமதாசா அணியினருக்கும் இடையிலான முரண்பாடா? அல்லது இவற்றின் ஒட்டுமொத்தமான விளைவா? என்பது குறித்து பல கேள்விகள் உள்ளன.

சிறிசேன கூரே முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் நெருங்கிய சகா பிரேமதாசாவிற்கு நெருக்கடியான காலகட்டங்களில் கூரே கை கொடுத்து உதவினார் என்பது ஒரு புறம் என்றால், மறுபுறம் சிறிசேன கூரேயை உருவாக்கியவரே பிரேமதாசா என்பது ஆகும் 1973ஆம் ஆண்டு கொழும்பு மாவட்ட அமைப்பாளராக பிரேமதாசா இருந்தபோது கூரேயை அரசியலுக்குக் கொண்டு வந்தார் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஆவதற்கும் உதவினர்.

இந்தவகையில் ஆரம்பிக்கப்பட்ட கூரேயின் அரசியல் வாழ்க்கை பிரேமதாசாவின் வழியை முற்றிலும் பின்பற்றியதாகவே இருந்தது சுருக்கமாகக் கூறுவதானால் பிரேமதாசா வளர்ந்து கொண்டு செல்லச் செல்ல, அவரின் வெற்றிடத்தை கூரே நிரப்பி வந்தார் என்றே கொள்ள முடியும். கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பதவியில் இருந்து கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பதவி, கட்சியின் கொள்கை வகுப்பாளர் குழுவில் இடம் என பிரேமாவின் இடத்தை நிரப்பி வந்த கூரே பிரேமதாசா ஜனாதிபதி ஆகியதும் அவரின் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சுப் பதவியும் - அதாவது பிரேமதாசாவிற்கு பெயர் தேடிக் கொடுத்த அமைச்சுப் பதவி - கூரேயிடமே சென்றடைந்தது. சுருக்கமாகக் கூறினால், 'பிரேமதாசாவின் காலடியின்மீது கூரே நடந்தார்' எனலாம்.

இதேசமயம்' கூரே மிகவும் நெருக்கடியான இருவேறு காலகட்டங்களில் பிரேமதாசாவின் வலதுகரமாகச் செயற்பட்டார். ஒன்று ஜே. வி. பி கிளர்ச்சியின்போது அதை ஒடுக்குவதில் கூரே அச்சமின்றிச் செயற்பட்டதாகத் அறியவருகின்றது. அண்மையில், புதிதாக எழும் குற்றச்சாட்டொன்றில் ஜே. வி. பி கிளர்ச்சிக் காலத்தில் அரசாங்கத்தால் இரகசியமாக நடத்தப்பட்ட 'ஒப்ஸ் கம்பையின்' என்னும் அமைப்புடன் கூரே தொடர்புகொண்டிருந்ததாகவும், இவ்வமைப்பை முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவும் தற்போதைய இராணுவ மேல்நிலை அதிகாரி லெப் ஜெனரல் லக்கி அல்கமவும் செயற்படுத்தியதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இதேபோன்று 1977-ல் ஆட்சிக்கு வந்த பின்னர். ஐ தே. கட்சிக்குள் எழுந்த முக்கிய முரண்பாடான பிரேமதாசா மீதான குற்றவிசாரணை கோரும் பிரேரணைக்கு எதிராக சிராகச் செயற்பட்டு அதில் பிரேமதாசா வெற்றிபெற உதவியவர் சிறிசேன கூரே ஆகும் அதாவது பிரேமதாசாவின் தளபதியாக நின்று அவருக்கு வந்தஎதிர்ப்புக்களை எல்லாம் எதிர்கொண்டவர் சிறிசேன கூரே ஆகும்.

இவ்வாறானதொரு நிலையிலேயே கூரேயை ஐ. தே. கட்சியின் பொதுச்செயலாளர் பதவியும் சென்றடைந்தது முன்னாள் பொதுச்செயலாளரான அமைச்சர் ரஞ்சன் விஜேரெட்னாவின் கொலையைத் தொடர்ந்து, பொதுச்செயலாளர் பதவிக்குவந்த ஹர்ச வர்தனாவும் கொல்லப்பட செயலாளர் பதவியைப் பொறுப்பேற்க ஐ, தே. க வில் உள்ள பலர் தயங்கினர். இந்நிலையில், ஐ தே: கட்சியின் தலைமைப் பொறுப்பை நெருக்கடி நேரத்தில் தான் ஏற்றதுபோன்று, செயலாளர் பதவியைகூரேயை பிரேமதாசா ஏற்குமாறு கேட்டுக்கொண்டார். தற்போதைய நிலையில் நீதான் இப்பதவிக்குத் தகுதியானவன் எனக் கூறி கூரேயைப் பதவி ஏற்குமாறு தூண்டிய பிரேமதாசா தனது உதவி என்றும் உண்டு எனவும் உறுதி கூறியிருந்தார். ஒரு வகையில் பிரேமதாசாவின் நிர்ப்பந்தத்தால்கூரேஇப்பதவியில்அமர்த்தப்பட்டார்என்றேகூறலாம்.

இந்நிலையில் இன்று ஐ தே.கட்சியில் சிறிசேன கூரேக்கு எதிராகமேற்கொள்ளப்படும் நடவடிக்கையானது யானது, பிரேமதாசா அணியினருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை ஆனால் இந்நடவடிக்கை எப்பொழுது, எங்கே ஆரம்பிக்கப்பட்டது என்பதும் அதற்கான அணுகு முறை எவ்வாறு கைக்கொள்ளப்பட்டது என்பதும் குறித்த கேள்விகளுமே மிதமானவையாகும்.

சிறிசேன கூரே தமக்கும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கும் இடையிலான முரண்பாடு பிரேமதாசாவின் இறுதிச் சடங்கு இடம்பெற்ற அன்றே தொடங்கியதாகத் தெரிவிக்கின்றார். முன்னாள் ஜனாதிபதியின் இறுதிச் சடங்குகள் இடம்பெற்ற அன்றைய தினத்தில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டமை தனக்குத் தெரியாது என்றும், இறுதிச் சடங்கிற்கான பொறுப்பை ஏற்றிருந்த அமைச்சர் என்ற ரீதியில்கூட தனக்கு இது அறிவிக்கப்படாதது மனவருத்தத்திற்குரியதென்றும் கூரே தெரிவித்துள்ளார்.

பிரேமதாசா இறந்ததும் பதவிக்குவந்த டி.பி. விஜேதுங்கா, பிரேமதாசா காலத்தில் பல முக்கிய பதவிகளை வகித்தவராகிலும் அவரை பிரேமதாசா அணியைச் சார்ந்தவர் என்றோ, அன்றி வேறு அணி எதையும் சார்ந்தவர் என்றோ எவரும் அடையாளம் காணவில்லை. இவருக்கு, பிரதமர் பதவி உட்பட நிதி. பாதுகாப்பு அமைச்சுக்கள் வரை பிரேமதாசா வழங்கியமையானது டி பி. காட்டிய விசுவாசத்தினாலோ அன்றி டி பீ. மீதான விசுவாசத்தினாலோ அல்ல, அவர் செய்த சில உதவிகளுக்கான கைமாறு என்றே பிற்காலத்தில் விமர்சிக்கப்பட்டது கண்டி தலதா மாளிகையின் எண்கோண மண்டபத்தில் நின்று பதவி ஏற்க விரும்பிய பிரேமதாசாவிற்கு, அதில் இருந்த தடைகள் சிலவற்றை நீக்கி டி பி செய்த உதவியே இவ்வளவு அமைச்சுப் பதவிகளும் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில்தான், பிரேமதாசா கொல்லப்பட்டதும் டி, பி, விஜேதுங்கா இடைக்கால ஜனாதிபதியாக வருவதற்கும் வாய்ப்பாக இருந்தது ஜே ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் இருந்தே ஐ தே. கட்சிக்குள் இரு பிரதான அணிகள் இருந்தன. இதில் ஜே·ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான உயர் குழாம் அணி ஒன்று மற்றையது பிரேமதாசா தலைமையிலான அணி ஒன்று எதிர்பாராதவிதமாக பிரேமதாசா இறந்தபோது ஐ தே. கட்சிக்குள் எழுந்த குழப்ப நிலையில் அடுத்த ஜனாதிபதி யார் என்ற நிலையில் குழப்பங்கள் உருவாகும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இரு அணியினரும் இணைந்து பிரதமராகஇருந்த டி.பீக்கு இவ்வாய்ப்பை வழங்கினர்

ஜே. ஆர் ஜெயவர்த்தனா அணியினருக்கு அப்போது தலைவர் போல் காணப்பட்ட ரணில் விக்கிரமசிங்காவிற்கு ஜனாதிபதவியில் குறிஇருந்தாலும்அன்றைய அரசியற்சூழ்நிலை அவருக்கு சாதகமாக இருக்கவில்லை; அத்தோடு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் டி:பி. விஜேதுங்காவை பிரேமதாசாவின் அணியாகப் பார்க்கவில்லை சிறிசேன கூரேயின் தலைமையிலிருந்த பிரேமதாசா அணியினரும் டி. பி. விஜேதுங்காவை தமது வைரியாகப் பார்க்கவில்லை. இந்நிலையில், டி. பி. விஜேதுங்கா இடைக்கால ஜனாதிபதியாகப் பதவியைத் தொடர இரு அணியினரும் விரும்பியோ, விருப்பமின்றியோ ஆனால் தேவைகருதி சூழ்நிலைக்கு இசைவாகநடந்து கொண்டனர்.

ஆனால் டி. பி. விஜேதுங்காவிற்கு ஜனாதிபதிப் பதவியை வழங்குவது தொடர்பாக ஜே. ஆரின் கை மறைமுகமாக பலமாகவே செயற்பட்டது. இதன் மூலம் ஜே. ஆர். - டி. பி.யின் திட்டங்களும் ஆரம்பமாகத் தொடங்கின எனலாம். சிறிசேன கூரே கூறியதுபோன்று பிரேமதாசாவின் இறுதிச் சடங்குடன் ஆரம்பமான இம்முரண்பாடு நீண்டு கொண்டே போனது. இதன் முதற்கட்டமாக அரசியலில் பிரேமதாசாவின் குடும்பம் பிரவேசிப்பது திட்டமிட்டு தடை செய்யப்பட்டது.

அதாவது ஹேமா பிரேமதாசாவும் அவரது மகன் சஜீத் பிரேமதாசாவும் ஓரம் கட்டப்பட்டனர். இது பிரேமதாசா அணியினரைப்பலவீனப்படுத்தும் நோக்கமாகவே இருந்தது. சிறிசேன கூரே அண்மையில் வழங்கிய பேட்டி ஒன்றில் ஹேமா பிரேமதாசா அரசியலில் பிரவேசிப்பதை தான் விரும்பவில்லை என்ற தொனிப்பட பேசியிருப்பினும் ஹேமா பிரேமதாசா, ஜே ஆர் - டி.பி ஆகியோரின் கூட்டு நடவடிக்கையால் ஓரம் கட்டப்பட்டார்.

தனது கணவனின் இறுதிச்சடங்கில் கண்ணீர் மல்க உரையாற்றிய ஹேமா பிரேமதாசா தனது அரசியல் அபிலாசையை வெளியிட்ட போதும் டி பி. விஜேதுங்கா அவரை ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேற்றுவதிலேயே குறியாக இருந்தார்.

பிரேமதாசா அணியினருக்கு எதிராக அடுத்த கட்ட நடவடிக்கையாக கொழும்பு நகரமேயர் ரட்ணசிறி ராஜபக்சாவை மேயர் பதவியில் இருந்து விலக்குவதற்கு ஐ தே:க சியேகாரணமாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஐந்து குற்றச்சாட்டுக்கள் வைத்து ராஜபக்சாவை பதவி இறக்கிய ஐ·தே க. அதனை இன்னும் நிரூபிக்க முடியவில்லை என்பது ஒரு பழிவாங்கல் நடவடிக்கையாகவே கருத இடமுண்டு.

இவ்வாறான சம்பவங்களினால் உருவாகிய, வளர்ந்த பிரேமதாசா அணியினருடனான முரண்பாடு காமினி திசநாயக்காவை உள்ளே கொண்டு வர டி பி. விஜேதுங்கா எடுத்த முடிவுடன் உச்சக்கட்டத்தை அடைந்தது. காமினியின் வருகையை வன்மையாக எதிர்த்த சிறிசேன கூரே காமினி திசநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினர் ஆக்கவிடாமல் செய்வதற்கான முழுமுயற்சியிலும் இறங்கினார். இதற்கு செயலாளர் பதவிக்குரிய அதிகாரங்களை மட்டுமல்ல, பிரேமதாசா அணியின் செல்வாக்கையும் பயன்படுத்தினார் தேசியப்பட்டியலில் தெரிவாகி இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களைப் பதவி விலகி காமினிக்கு இடம் கொடுக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்

இவ்விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினது ஆதரவும் கூரேக்கு ஆரம்பத்தில் இருந்தது இதற்கு காமினி திசநாயக்காவின் வருகை தம்மைப் பாதிக்கும் என ரணில் விக்கிரமசிங்கா கருதியதே காரணம் ஆகும் ஆனால் கூரேயைப்பொறுத்தே பிரேமதாசாவின் வைரி என்ற ரீதியிலேயே காமினி நோக்கப்பட்டார் இருவரினதும் இக்கூட்டால்காமினியின் வருகைக்கான எதிர்ப்பு சற்றுப் பலமாகவே இருந்தது.

இச்சூழ் நிலையில் தான் ஐ. தே. கட்சி தென்மாகாண சபைத்தேர்தலில் தோல்வியைச் சந்தித்தது. கட்சியின் ஒரு பகுதியினர் குறிப்பாக பிரேமதாசா அணியினர் டி பி விஜேதுங்காவின் கொள்கைக்குக் கிடைத்த தோல்வி என்றும் பிரேமதாசாவின் கொள்கையைக் கைவிட்டதினால் எழுந்த விபரீதம் எனவும் வெளிப்படையாகவேவிமர்சிக்கத்தொடங்கினர் இதன் உச்சக்கட்டமாக சிறிசேன கூரே ''அடுத்தபொதுத்தேர்தலில்ஐ. தே.கட்சிவெற்றிஅடையவேண்டுமென்றால் கட்சி பிழைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும் எனஅறிவித்தார்'' கூரேயின் இக்கூற்றானது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு எதிராக கூரே தெரிவித்ததென்பது கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய செயல் எனவும் விமர்சிக்கப்பட்டது, இந்நிலையில் ஜனாதிபதி டி. பி- யின் ஆத்திரம்முழுமையாக கூரேயின் பக்கம் திரும்பியதெனலாம்.

ஆனால் தென்மாகாண சபைத் தோல்வியானது டி. பி விஜேதுங்காவின் கைகளை ஓரளவு கட்டிப் போட்டது. பிரேமதாசாவின் அணியை வெளிப்படையாகப் பகைத்துக் கொள்வது புத்திசாலித்தனமல்ல என்ற நிலையில் அவ்வணியை இதைப்பதில் மறைமுகமாக செயற்பட திட்டம் தீட்டப்பட்டது இதேசமயம் பிரேமதாசாவின் கொள்கையைப் பின்பற்றுவதாகவும் பிரேமதாசா அணியினருடனான முரண்பாட்டை தீர்க்க முற்படுவதாகவும் காட்டிக் கொள்ள முற்பட்டார்,

இந்த ரீதியிலேயே ஹேமா பிரேமதாசாவை டி. பி. விஜேதுங்கா சந்தித்துப் பேச்சு நடத்தியதும் பிரேமதாசா கொள்கைகளை அமுல்படுத்த முயற்சிப்பது போன்று அறிவிப்புக்கள் விடுத்ததும் ஆகும்.

இப் புதிய அணுகுமுறையின் மூலம் பிரேமதாசா அணியில் ஒரு பகுதியினரைத் திருப்திப்படுத்தும் அதேவேளை கட்சி ஒழுங்காற்று நடவடிக்கை என பிரேமதாசா அணியில் பலமுள்ள ஒரு பகுதியினரை ஓரங்கட்டுவதே டி. பி. யின் திட்டமாகும். இதன் மூலம் பிரேமா அணியினருக்குள்ளேயே முரண்பாட்டைத்தோற்றுவித்துப் பலவீனமடையச் செய்வதே குறிக்கோளாகும்.

இவ் அணுகுமுறையின் படியே ஹேமா பிரேமதாசாவிற்கு அமைச்சர் பதவி வழங்கப்பட இருப்பதாகப் பிரசாரம் செய்து ஒருபகுதியினரைத் திருப்திப்படுத்தும் அதேவேளை கூரேயை வெளியேற்றுவதன் மூலம் பிரேமா அணிக்குள்ளேயே முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்கி அவர்களுக்கு மத்தியில் பிளவுகளை உண்டாக்க முயற்சிகளை மேற்கொள்வதாகும். அதாவது தளபதி இல்லாத சேனைகளாக பிரேமதாசா அணியை ஆக்குவதே நோக்கமாகும். ஆனால் ஹேமா பிரேமதாசா இவ் விடயத்தில் சற்று தொலை நோக்குடன் செயற்பட்டதுபோன்று உள்ளது.

இதேசமயம்கூரேயின் தலைமையில்இடம்பெற்ற கூட்டமொன்றில் மக்கள் கட்சித்தலைவர் ஒஸி அபயசேகர பேசிய பேச்சு ஒன்று ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு ஆத்திரத்தை ஊட்டியது டி.எஸ். சேனநாயக்காவும் பிரேமதாசாவுமே ஐ. தே. கட்சியை வளர்த்தவர்கள் என்ற ஒஸியின் பேச்சு ஒஸி மீதும் அதற்கு தலைமைதாங்கிய கூரே மீதும் ஜே ஆர்.ஜெயவர்த்தனாவிற்கு கோபத்தை மூட்டியது. இந்நிலையில் பிரேமதாசா அணியைப் பலவீனப்படுத்தும் சிந்தனையில் இருந்த டி. பி. விஜேயதுங்காவிற்கு ஜே. ஆரின் உதவி கிட்டியது.

## ஜெயராஜ்

ஜே ஆரின் தலையீடு காரணமாக ரணில் விக்கிரமசிங்கா கூரேக்கு வழங்கிய ஆதரவு பேச்சு மூச்சு இன்றிக்கைவிடப்பட்டது. இதைத்தொடர்ந்து கூரே மீது டி.பி அழுத்தத்தைப் பிரயோகிக்கக்கூடிய சூழ் நிலை எழுந்தது- கூரேயைபதவி விலகுமாறு டி பி. விஜேயதுங்காவால் கோரப்பட்டபோது கூரே வேறுமார்க்கமின்றி ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அதாவது கூரே நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் வெளியேறினார்.

ஆனால் இது கூரேயுடன் மட்டும் நிற்கவில்லை. பிரேமதாசா அணியைச் சேர்ந்த ஐ· தே கவின் உதவிப் பொதுச்செயலாளர் சுசில் முனசிங்காவை பதவிவிலகுமாறு ஜனாதிபதி கோரியிருப்பதன்மூலமும், சண்டே ஒப்சேவர் ஆசிரியர் மகிந்தபலாவும் லேக்கவுஸ் தலைவர் சுனில் றோட்கோவும் பதவிவிலகி இருப்பதன்மூலம் அவதானிக்க முடிகின்றது. இப்பட்டியலில் சில அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என மேலும் நீடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

இந்நிலையில் கூரேயின் வெளியேற்றம் என்பது பிரேமதாசா அணியினருக்கு பலமான அடி என்றே கொள்ளமுடியும். ஆனால், தேர்தல் ஆண்டில் ஐ தே கட்சிக்கும் டி பி விஜேதுங்காவிற்கும் இது எந்தளவிற்கு பயன்படும் என்பதில் கேள்வியாகவே உள்ளது இதேசமயம் ஜே ஆர் ஜெயவர்த்தனா பிரேமதாசா அணியின் மீது தனது வஞ்சகத்தை ஓரளவேனும் தீர்த்துக்கொண்டார் என்றே கூறவேண்டும்

(11ஆம் பக்கம் பார்க்க)

# மூன்றாம் உலகில் வறுமையின் கொடூரம் நிமிடத்திற்கு 24 பேர் பலியாகின்றனர்

நவீன விஞ்ஞான, தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய நிலையில் வறுமைக்கும் பட்டினி இறப்புகளுக்கும் முடிவுகட்ட முடியாமல் மனிதன் திண்டாடுகின்றான். இப்பிரச்சினையின் அகோரத்தில் மூன்றாம் உலக நாடுகள் பல கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன 1993 ஆம் ஆண்டின் உலக சனத்தொகை சிபார்சு பணியகத்தின் (மீ. ஆர் மீ.) (ரு சு) கணிப்பீட்டின்படி உலக சனத்தொகை 550 கோடிகளைத் தாண்டிவிட்டது

இத்தொகை இரண்டாயிரமாவது ஆண்டில் 850 கோடிகளாக உயர்வடையலாம் என்று எதிர்பார்க்கபபடுகிறது இந்த சனத்தொகையில் மூன்றில ஒரு பகுதியினர் வறுமையால் வாடுகின்றனர் இந்த வறுமையின் அகோரப்பிடியில் சிக்கி மீளமுடியாமல் தவிக்கும் நாடுகள் பெரும்பாலும் மூன்றாம் உலகநாடுகளே

அண்மைக்கால அறிக்கைகளின்படி 114 அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 400 கேடிக்கும் மேற்பட்ட சனத்தொகையினர் வாழ்கின்றனர். இந்தசனத்தொகையில் 225 கோடிக்கும் சற்று அதிகமான தொகையினர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர்

வறுமையானது 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அறியமுடிகிறது. 40 வருடங்களுக்கு முனபு இருந்த வறுமை நிலையுடன் ஒப்பிடும் போது இன்றைய நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியடைந்த ஒரு காலகட்டத்தில் தான் இந்த வறுமையின் வளர்ச்சி விகிதம் என்பது வியப்பிற்குரியதாகும்

வருடம் தோறும் போசாக்கின்மை மற்றும் பல்வேறு விஷமான நோயகள் ஆரோக்கிய மற்ற வாழ்வு என்பவற்றால் உயிரிழக்கும் தொகையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது வருடம் தோறும் 1½ கோடிக்கு மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர். சிசு மரண விகிதமும் கணிசமானளவு அதிகமாகும்.

வறுமையின் கொடூரத்தால் வருடந்தோறும் 3-5 வயதுக்கு இடைப்பட்ட இறப்பு விகிதம் 40,000 50,000 இலட்சத்திற்கும் இடைப்பட்டதாகும் என்று சர்வதேச கணிபபீடுகள் தெரிவிக்கின்றன

'ஒக்ஸ்பாம்' இண்டர்நெசனல் ஆகிய நிறுவனங்களின் ஆய்வுகளின்படி இன்று உலகில் உற்பத்தி செய்யப் டுகின்றன உணவுபபட்டினியால் வாடுகின்ற எலலாச் சனத்தொகைக்கும் போதியதாகும் ஆனால இங்குள்ள முக்கிய பிரச்சினைபங்கீடுஎன்பதாகும் உற்பத்தி செய்யபபடுகின்ற உணவு சரியான முறையில் பங்கீடு செய்யப்படாமல் வறுமைக்கு நிவாரணமாக அமைந்திருக்கும் ஆனால் இந்தப்பங்கீடு ஒழுங்கா திட்டமிட்டபடி நடைபெறுவதில்லை.

ஒரு நாட்டில் காணப்படுகின்ற உள்நாட்டு அரசியல் நெருக்கடிகள், இனப்பூசல்கள், பொருத்தமற்ற யுத்தங்களில் சிக்கி அதன் விளைவாக ஏற்படுகின்ற பாதுகாப்பு செலவினம், குடியேற்ற வாதத்திற்கு உள்ளாகியிருந்தமை போன்ற காரணிகள் ஒருநாட்டின் தொடர்ச்சியான வறுமைக்கும் பொருளாதார அழிவிற்கும் வழிவகுக்கு எனலாம்

இன்று உலகில் வறுமையால் வாடும் மக்களுக்கு கைகொடுப்பதற்காக போதிய நிதி செலவு செய்யப்படாவிட்டாலும் சர்வதேசரீதியில் போர்களுக்காகவும் ஆயுத பரிகரணத்திற்காகவும் பாரிய தொகை செலவு செய்யப்படுகின்றது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் இது வரையில் 130 இற்கு மேற்பட்ட போர்கள் நிகழ்ந்துள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. ஆயினும் இவற்றில் அதிகமானவை மூன்றாம் உலக நாடுகளிலேயே நடைபெற்றுள்ளன. இந்நிலை இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பதை சர்வதேச நிகழ்வுகளைக் கொண்டு அவதானிக்க முடிகின்றது.

கடந்த ஒரு தசாப்தங்களில் இவ்வாறு யுத்தங்களுக்காக சுமார் 800.000 இலட்சம் கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளதாக நியு இண்டர்நெஷனல் சஞ்சிகையின் ஆய்வொன்று கூறுகின்றது. இந்தச் செலவினமானது மூன்றாம் உலக நாடுகளின்சனத்தொகையால் மூன்று வருடங்களுக்கு உழைக்கும் வருமானத்திற்கு சமமாகும்.

குறிப்பாக மூன்றாம் உலக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பலவற்றில் இலட்சக்கணக்கானோர் பட்டினியால் மடிகின்ற அதே நேரம் அந்நாடுகள் அநாவசியப் போர்களில் சிக்கி தனது வருமானத்தில் பாரிய தொகைகளை ஆயுதக் கொள்வனவிற்காக செலவிடுகின்றன,

இதற்கு சிறந்த உதாரணங்களாக இன்றைய சோமாலியா, றுவாண்டா எதியோப்பியா அல்ஜீரியா புருண்டி யுகோஸ்லோவியா போன்ற பல நாடுகளைக் கூறலாம.

இந்நாடுகளுக்கு ஆயுத விற்பனையில் ஈடுபட்டிருப்பது முன்னணி ஐரோப்பிய நாடுகள் பலவே வறுமையில் உழலும் நாடுகளின் வளங்களும் இந்த ஐரோப்பிய நாடுகளை சென்றடைவதால் மூன்றாம் உலக நாடுகள் பலதீர்க்க முடியாத கடன்சுமையால்பாதிக்கப்பட்டுள்ளன

இலங்கையும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. இதே நிலைமையே இங்குகாணப்படுவது 17 வருடங்களாக நடைபெற்று வருகின்ற இனப்பிரச்சினையாகும். இது அண்மைக் காலங்களில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியையும் வெகுவாக பாதித்துள்ளது பல சவால்களுக்கு மத்தியில் வறுமையைப் போக்குவதற்காக பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் அதனைக் கூட சரியான முறையில்நிறைவேற்ற முடியாதளவிற்கு இந்நாட்டில் பாதுகாப்பு செலவினங்கள் அதிகரித்துச் சென்றுள்ளதை அண்மைக்கால அறிக்கைகள் காட்டுகின்றன.

இன்று உலகில் 10 முன்னணி ஆயுதவிற்பனை நாடுகள் காணப்படுகின்றன. சோவியத் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், சீனா ஆகியன முனனணி ஆயுதவிற்பனை நாடுகளாகும் இந்நாடுகள் ஐ நா வின் பாதுகாப்புச் சபையிலும் நிரந்தர அங்கத்துவ நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது,

1992 ஆம் ஆண்டு அறிக்கைகளின்படி சோமாலியாவில் உணவுப் பொருட்களை விட மேலதிகமாக ஆயுதங்கள் இருப்பதாக கூறப்படுகின்றது.

இருதயநோய் 'கொலஸ்ரோல்' போன்ற நோய்களால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வருடம்தோறும் 25 இலட்சம் பேர் இறக்கின்றனர், இதுஇவ்வாறிருக்க வறுமை போசாக்கின்மை காரணமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஒரு நிமிடத்திற்கு 24 உயிர்கள் பலியாகின்றன-

அண்மையில் மொரக்கோவில் நடைபெற்ற 'கெட்' வர்த்தக உடன்படிக்கை மாநாட்டிலும் இதேபிரச்சினை கடுமையான விமாசனத்திற்குள்ளாக்கப்பட்டதாக தெரிகிறது.

123 நாடுகள் கலந்து கொண்ட இந்த வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றிய இலங்கைஉட்படபலநாடுகளின் பிரதிநிதிகளாலும் வலியுறுத்தப்பட்ட விடயம் மூன்றாம் உலக நாடுகள் குறித்து அபிவிருத்தி அடைந்த நாடுகள் நிலையான ஒரு கொள்கையை வகுத்து வறுமையாலும் பட்டினியாலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு உதவிகளை வழங்க வேண்டும் என்பதே

எனவே இன்று உலகில் பல்வேறு வகையான சர் தேச ரீதியில் இயங்கும் அமைப்புகள் இருந்தாலும் அவற்றின் செயற்பாடுகளும் சரியான முறையில் அமையாததே தொடரும் வறுமைக்கும் காரணமாகும்.

## சுவடுகள்...

ஒரு நொடிகூட தமது மகளைப் பிரிய ஒவ்வாத மாமன் மாமி, அவளை நாடுகாக்க அனுப்பி விட்டு பெருமிதத்துடன் நிற்கின்றனர் ஓ! புரிகிறது இந்த மண் கண்டுள்ள பாரிய மாற்றம், எழுச்சி மக்களின் மனங்களில் கெழுந்து விடடெரியும் இவ வீரம், மானஉணர்வு சுதந்திர விடியலின் வேகம்...

அவனின் சிந்தனை அலைமோதலின் முடிவில் ஒரு தெளிவு பிறக்கிறது ஆனால் முடிவு ஓ அதுதான் இன்னும் உறுதிய கவில்லை.

இரவு வந்தது வழமையான குண்டுச்சத்தங்களைக் காற்று சுந்தம் நெடியுடன் கொண்டும் வந்தது ''சண்டை நடக்குது ஆரார் பெததது-ள் ச குது களோ! எத்தினை பேர் பரிதவிக்கினமே'' என அவனது மாமி வாய்விட்டு ஏங்கியது சேடடது. வேங்கைகளின் வீரம் சண்டு நிலவும் கருமுகிலின் பின்னே ஒழிந்துகொள்ள வானமோ மகிழ்ச்சியால் ஆனந்தக் கண்ணீர சோனமாரியாகப்பொழிந்தது. அவன் தன்னையறியாமலே உறங்கி விட்டான்.

நேரம் பிந்தியே நித்திரை விட்டெழும்பியவன் அலுப்புடன் முன சுதிரையில் வந்து அமர்கிறான் கேற்திறந்து சத்தம் கேட்க நிமிர்ந்தவன் இரு பெண் போராளிகள் வர வ சாரங்கினி வருகிறாளோ, என எதிர்பார்த்து ஏமாந்தான் அவனைக் கண்டுதாமதித்து பின்பு அவர்கள் ''ஐயா!ஐயா!''எனமாமாவை அழைத்தனர், உணர்ச்சியற்ற அவர்களது முகத்திலிருந்தும் குரலிலிருந்தும் எதையும் உணர முடியாது அவன் தவித்தான்.

'வாங்கோ பிள்ளையள்' மாமாதான் அழைத்தார். ''இல்லை ஐயா... ராத்திரிச் சண்டையில சங்கீதாவுக்கு கொஞ்சம் காயம்...'' சாரங்கினிதான் சங்கீதா என்பதை உணர்ந்த அவன் அதிர்வடைகிறன் அவர்கள் கதையை முடிக்கும்முன், ''பிள்ளையள் இந்த மண்ணிற்காக எத்தனையோ தாய் தேப்பன் தங்கட பிள்ளையள அனுப்பினது போலத்தான் நானும் அனுப்பினனான்! பிள்ளையின்ர பொடி எப்ப வருமெண்டு சொல்லுங்கோ, இல்ல அதுவும் கிடைக்காட்டி விடுங்கோ, பொயயை எடுக்க எண்டு போய் சாகாதைங்கோ, அவள் நிண்டு போராடின மண்ணிலேயே அவள்ட உடல் உரமாகட்டும்'' என்றசாரங்கினியின் தந்தையை ஆதங்கத்துடன் பார்த்த அவர்கள் விடைபெறுகின்றனர். ஆயிரம் மின்னல்கள் அவனுள் வெட்டி வெளிந்தன...! அவனுள் சாரங்கினியின் குரல் ஒலிக்கத் தொடங்கியது......

அவனது முடிவு! உறுதியாகியது! அவன் மாமாவைப் பார்த்தன் குலுங்கி அழும் அந்த உள்ளங்களிடம் கண்களால் விடைபெற்றான்! ''மாமா மாமி! சாரங்கி சாகேல்ல! இனி அவள் என்னில வாழ்வாள்!'' என்றவன் அவளின் சுவடுகளைத் தொடர்ந்து அண்ணனின் தலைமையில் விடியலைத்தேடி, விரைந்து சென்றான்

# தமிழும் தனிநாயகமும்

''தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்ற பாரதியின் உள்ளத்து உணர்விற்கு உருவம் கொடுத்து தமிழின் தாற்பரியத்தை உலகுக்கு எடுத்துக் காட்டிய தமிழியல் மேதை தான் தனிநாயகம் அடிகள். அன்னைத் தமிழினை அன்பு செய்து அதனை அணி செய்து தமிழ்மொழியின் பண்பாட்டு நலத்தையும் புதிய பரிமாணத்தையும் இயற்கை நயத்தையும் புதுப் புலமையையும் உலகமும் ஏன் தமிழினமுமே புரிந்துகொள்ள வைத்த அரும்பணி இவரையே சாரும்.

தனிநாயகம் அடிகள் தமிழியலுக்குள் நுழையுமுன் தமிழியற் சிந்தனைகளும் ஆய்வுகளும் தேங்கியே கிடந்தன. தமிழ்மொழி தன்னைச்சுற்றி மிகச் சிறிய அளவிலேயே ஒரு எல்லையை அமைத்துக் கொண்டு அதற்குள்ளேயே நின்று கொண்டிருந்தது. தமிழறிஞர்களும் புலவர்களும் இலக்கிய கர்த்தாக்களும் தங்களுடைய தனித்துவத்தை விடாமல்பிடித்துக் கொண்டிருப்பதற்காகவும் இன்னும் பல காரணங்களுக்காகவும் அமுதமொழியாம் தமிழ்மொழியின் தனித்துவத்தையும் மாண்பையும் இனிமையையும் தமக்குள்ளேயே புதைத்தும் சிறியஅளவில் விவாதித்தும் புகழ்ந்து பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தனர். இந்த வேளையிலேதான் தமிழே! உன்னை உலகறிய வைத்து உன் புகழை உன் மேன்மையை எடுத்தியம்பும் நற்தூதுவனாக நான் வருகின்றேன் எனச் சொல்லிக் கொண்டு அடியெடுத்து வைத்தார் தனிநாயகம் அடிகள். தமிழுக்கென்றே சிறப்பானதொரு இடத்தை உலக அரங்கிலே பெற்றுக் கொடுத்த அடிகளார், தமிழியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகினார்.

தமிழியற் சிந்தனைகளைத் தோற்றுவித்து, அதனை ஆய்ந்தறிந்து செயற்படும் உரிமை தமிழை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மாத்திரமே உரியதென்றிருந்த நியதியையும், சிலரின் எண்ணங்களையும் அப்புறப்படுத்தி விட்டு தமிழுக்கும் அதன் இலக்கியங்களுக்கும் உயிரூட்டம் கொடுத்து அவை ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வழிகோலி பழமையானசெழுமை மிகு தமிழின் ஆராய்ச்சியில் புதிய துறைகளுக்கான அத்திவாரத்தையும் அமைக்க பல தமிழியற் கட்டுரைகளையும், நூல்களையும் ஆக்கி அளித்தார். மொழி ஆய்விலும், அதனை வளர்ப்பதிலும் அதனைப் பரப்புவதிலும் அவருக்கு இருந்த ஆர்வமும் ஆற்றலும், அறிவும், ஆளுமையும் தனித்துவமானவை. அவரிடம் காணப்பட்ட ஆர்வமும் இலட்சியப் பிடிப்பும் நன்மையின் மீதுள்ள நாட்டமும், தமிழின் மீது கொண்டிருந்த பாசமும் அவரை உண்மையானதொரு தமிழ்த் தொண்டனாக வாழ வழியமைத்தது.

தமிழடியார் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த் தாகத்தினதும், தமிழ்ப்பணியினதும், தமிழ் வளர்க்கும் ஆவலினதும் உன்னத வெளிப்பாடாக மலர்ந்தது தான் ''உலகத்தமிழ்ஆராய்ச்சி மன்றம்'' இது அடிகளாரின் அரும்பணிக்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்திருந்தது. 1964ஆம் ஆண்டிலே இவருடைய உள்ளத்திலே கருக்கொண்ட அனைத்துலகத்தமிழாராய்ச்சி மன்றம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம், 1966ஆம் ஆண்டு மலேசியாவிலே முதலாவது தமிழராய்ச்சி மாநாடாகப் பிரசவமாகியது உலகில் பல்வேறு பகுதிகளிலும் பரந்து, சிதறிக் கிடந்த தமிழ் அறிஞர்களை ஒன்று திரட்டி, தொடர்புகளை ஆழப்படுத்தி, தமிழை மெருகூட்ட, தமிழின் தார்ப்பரியத்தை உலகறியவைக்க இந்தத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு பெரிதும் துணை புரிந்தது.

உலகின் பல நாடுகளில் தனிநாயகம் அடிகள் தன் பாதங்களைப் பதித்து தமிழிலும், தமிழரிடமும் உள்ள தனிப்பண்புகளை, தனிக்கூறுகளை, இலக்கியச் செல்வங்களை, இலக்கிய நயங்களையெல்லாம் பறைசாற்றினார். இதனால் தமிழ் புதிய பரிமாணத்தைப்பெற்றுக்கொண்டது. தமிழரும் தம் மொழியின் பெருமையை உணர்ந்து செயல்பட முடிந்தது. புதிய மொழியியல் போக்குகளை உள்வாங்கிக் கொண்டு காலத்திற்கொத்த புதிய தமிழியல் வரலாற்றை தமிழர் அடையும் சாத்தியப்பாடுகள் எழுந்தன. எனவே தனிநாயகத்தைப் புகழ்ந்து கொண்டும், வியந்து கொண்டும் செயற்பாடற்றவர்களாய் வாழ்வதைவிட அந்த அடிகளார் காட்டிய வழியைத் தொடர்ந்து தமிழை நன்றாகச்செய்வதே தமிழியலில் ஆர்வம் கொண்ட அனைவருக்கும் உள்ள பொறுப்பும் கடமையுமாகும்.

கி. அ. டலிமா

## ஆபிரிக்காவின்

எழுப்புகின்றனர். 713 மைல் அமெரிக்காவிலிருந்து தொலைவில் கெயிற்றித் தீவில் கறுப்பின மக்கட்கு பதிலாக வெள்ளை இனத்தவர் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? 6000மைல் தொலைவிலுள்ள மத்திய கிழக்கில் அமெரிக்காவுக்கு என்ன அவ்வளவு கரிசனம்? என கேள்வி மேல்கேள்வியாக உலக மனச்சான்றினை உலுக்கும் வண்ணம் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இப்போது கண்டனங்கள் தாங்கமுடியாமல் தாம் தலையிடாவிட்டாலும் அண்டை ஆபிரிக்க நாடுகள் முன்வந்தால் அவர்களின் படையை ஐ. நா. சார்பாக அனுப்ப கிளிண்டன் தயார் என்ற ஒரு கருத்து முன்வைக்கப்படுகின்றது. ஆனால் இதற்கு ஆபிரிக்க நாடுகள் சம்மதிக்குமா என்பது ஒருபுறமிருக்க கொலியைக் கைப்பற்ற நாள் குறித்த வண்ணம் போராடும் துட்சினை போராளிகள் சருவதேச தலையீட்டைத் தாம் இக்கட்டத்தில் விரும்பவில்லையென மிக உறுதியாகக் கூறிவிட்டனர். 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என கணியன் பூங்குன்றனார் அன்று பாடியது இன்றும் கன்மேல் எழுத்துப் போல் சருவதேச அரசியலுக்கும் முற்றிலுமாகப் பொருந்தி விட்டது அல்லவா?

யாழ்ப்பாணம் நூலகம்

# பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் அமெரிக்க நிறுவனம் கொள்வனவு

(கொழும்பு)

கல்ரெக்ஸ் என்ற அமெரிக்க பன்னாட்டு எண்ணெய் நிறுவனம் கொலாவை பெற்றேலிய சுத்திகரிப்பு நிலையத்தைக் கொள்வனவு செய்யவுள்ளது. இதன் பிரகாரம் இலங்கை பெற்றோலியம் கூட்டுத் தாபனத்தின் 51 சதவிகிதமான பங்குகள் கல்ரெக்ஸ் நிறுவனத்தின்கட்டுப்பாட்டின் கீழ் வரும். மிகுதி 49 சதவிகிதமான பங்கு சிறிலங்கா அரசிடமிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. 51 சத விகிதமான பங்கைக் கொள்வனவு செய்ய கல்ரெக்ஸ் 500 மில்லியன் ரூபா தர முன்வந்துள்ளது.

முதலில் கல்ரெக்ஸின் கேள்விப் பத்திரத்தை அமைச்சரவை நிராகரித்தது. அரசு, பிற்பாடு கேள்விப் பத்திரத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் உள்ள பொருளாதாரக் கொள்கை மற்றும் நிதி விவகார அமைச்சரவை உப குழுவிற்குச் சமர்ப்பித்தது. உப குழு கல்ரெக்ஸின் கேள்விப் பத்திரத்தை ஏற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வேலை பெற்று 6 மாதங்கள் உணவு முத்திரை பெறலாம்

(கொழும்பு)

உணவு முத்திரை பெறும் குடும்பத்தில் உள்ள ஒருவர் வேலை பெற்ற பின்னரும் தொடர்ந்து ஆறு மாதத்திற்கு உணவு முத்திரை பெற முடியும்.

இதற்கான உத்தரவை சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சம்பந்தப்பட்ட அமைச்சிற்கு பிறப்பித்துள்ளார்.

# வர்த்தக முகாமைத்துறை இரு துறைகளாக இயங்கும்

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வர்த்தகம் மற்றும் முகாமைத்துவத் துறை இரு துறைகளாக இயங்க உள்ளது. இனி வர்த்தகத்துறை, முகாமைத்துவத்துறை என்று இரு வேறு துறைகளாக இயங்கும். இதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் குழு வழங்கியுள்ளது. யாழ். பல்கலைக் கழகக் கலைப்பீட வட்டாரத்தினர் இதனைத் தெரிவிக்கின்றனர்.

# அரசுக்கு எதிரான சதி விசாரணை எதுவுமில்லை

## குற்ற புலனாய்வுத்துறை தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கு எதிரான சதி தொடர்பாக விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸ் மா அதிபர் அமரசேகரா ராஜபக்ஷ தெரிவித்தார்.

'கூரே - இராணுவ சதி, பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணை செய்யவுமில்லை; அறிக்கை சமர்ப்பிக்கவும் இல்லை என்றார் அவர்.

# உல்லாச விடுதிகளில் அதிக பாதுகாப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் உள்ள உல்லாசப் பயணிகளின் தங்குமிடங்கள்யாவும் பாதுகாப்புப் பலப்படுத்தப்படவுள்ளது என சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசு மிகத் தீவிரமாகச் செயற்பட்டுவருவதாகவும் இதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா வானொலி தெரிவித்தது.

# தப்பி ஓடிய சிப்பாயின் மரணத்தில் சந்தேகம்

(கொழும்பு)

இராணுவத்தை விட்டுஓடிய சிப்பாய் பண்டு சனத்குமார (வயது 22) மரணம் தொடர்பாக கொழும்பு தெற்கு பதில் மரண விசாரணை அதிகாரி லம்பேட் பெரேரா பகிரங்க தீர்ப்பு வழங்கியுள்ளார். மருத்துவ அறிக்கையைத் தொடர்ந்தே இந்தத் தீர்ப்பை அவர் வழங்கியுள்ளார்.

கொழும்பு தெற்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது சனத்குமார இறந்து காணப்பட்டார். அவரது தலையிலும் உடலிலும் காயங்கள் காணப்பட்டன

பொலிசாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் மரண வீடு ஒன்றில் வைத்து அவர் ஏப்பிரல் 5ஆம் திகதி கைது செய்யப்பட்டார். பின்பு பரணகொட முகாமிற்குக் கையளிக்கப்பட்டார். ஏப்பிரல் 8ஆம் திகதி சுகவீனம் காரணமாக இராணுவ மருத்துவ மனையில் அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. மாலையில் அவர் ஹோமகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவர்கள் அவர் இறந்து விட்டார் என்று அறிக்கை சமர்ப்பித்தனர்.

மரண விசாரணை அறிக்கையையும் மருத்துவ அறிக்கையையும்பரிசீலித்த ஹோமகமபதில்நீதிபதிஆவணங்களையும்சாட்சிகளையும் மே 16ஆம் திகதி நீதி மன்றத்தில் ஆஜர் செய்யும்படி பணித்துள்ளார்.

# படகு விபத்தில் 28 மாணவிகள் பலி

(சென்னை)

சென்னைக் கருகில் உள்ள ஏரி ஒன்றில் நேற்று படகுகளில் உல்லாசப் பயணம் சென்ற பள்ளிமாணவிகளில் குறைந்தது 28பேர் ஒரு படகு கவிழ்ந்ததால் உயிரிழந்தனர்

இந்தப் படகில் சென்ற 40 மாணவிகளில் மூன்று பேரை உள்ளூர் மீனவர்கள் மீட்டுள்ளனர் எஞ்சியுள்ளவர்களைத் தேடும் பணியில் தீயணைப்புத் துறையினரும் மீனவர்களும் ஈடுபட்டுள்ளதாக தமிழக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

சென்னை நகரின் மூன்று பள்ளிகளைச் சேர்ந்த மாணவிகள் கோடை விடுமுறைக்கென பயணம் மேற்கொண்டதாகவும் இவர்கள் மூன்று படகுகளில் உல்லாசச் சவாரி சென்றதாகவும் அதில் இரண்டு படகுகள் பத்திரமாக திரும்பியதாகவும் மூன்றாவது படகு ஒரு ஏரியில் மூழ்விட்டதாகவும் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் ஒன்பதிற்கும் பதின் மூன்று வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என தெரியவருகின்றது.

# கராத்தே போட்டிகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் கராத்தே போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. நாளை காலை 8 30 மணிக்கு முதற்கட்ட தெரிவுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. ஏற்கனவே விண்ணப்பித்த சகல போட்டியாளர்களையும் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொள்கின்றது.

# மெய்வல்லுநர் போட்டி

(தென்மராட்சி)

யா. மட்டுவில் வடக்கு சந்திர மௌலீஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய மைதானத்தில் இன்று பி-ப. 2 மணிக்கு அதிபர் திரு ந, சிவசோதி தலைமையில் இடம்பெறவுள்ளது-

(86)

# மாகோவில் மண்ணெய்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறைக்கு 'றுகுணு' கப்பல் நாளை உரத்துடன் வந்து சேரும்- இக் கப்பலில் மேலும் துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பனவும் வருகின்றன.

'மாகோ' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது இக்கப்பலில் 4 ஆயிரத்து 620 பரல் மே மாதத்திற்குரிய மண்ணெய், கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு 188 துவிச்சக்கர வண்டிகள், சங்கானை ப. நோ. கூ. சங்கத்திற்கென விளையாட்டு உபகரணங்கள், பல்கலைக்கழகத்திற்கு எரிபொருள்கள், யாழ் செயலக புனர்வாழ்வுத் திணைக்களத்திற்கு காகிதாதிகள் எடுத்து வந்தது

(யோ)

# சிறிசேன கூரேயிடம்

ஆயினும் மரணமானார் ஜே. ஆரின் பேச்சைக் கேட்டு அரசியல் நடத்தத்தயாராகி விட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு டி. பி. விஜேதுங்கா எந்தளவிற்கு வழி விட்டுக் கொடுப்பார் என்பதும் சந்தேகமே ஏனெனில் பிரேமதாசா இருந்த போது இருந்த டி. பி, விஜேதுங்கா இன்றில்லை, தன்னைக்கொலுவேற்ற உதவிய பிரேமதாசா அணியையே சிதைக்க முற்பட்ட டி. பி. விஜேதுங்கா தமது அதிகாரத்திற்காக ரணிலுடனோ, ஜே. ஆருடனோ மோத மாட்டார் என்பது என்ன நிச்சயம்?

# காலியில் பொருள் இறக்கல் வர்த்தகர் பெரும் சிரமம்

(கொழும்பு)

தூத்துக்குடியிலிருந்து கொழும்பு துறைமுகத்திற்கு மிளகாய், மஞ்சள், கடுகு முதலிய பொருள்களை ஏற்றி வந்த இரு கப்பல்கள் இடையில் காலிக்கு திசை திருப்பப்பட்டதால் இவற்றை இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் இப் பொருள்கள் தற்போது காலி துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ளன தாறுமாறாக இவை கிடப்பதால் இவற்றை சீர் செய்யும் சிக்கலும் எழுந்துள்ளது.

மூடைகளை தனித்தனியாக பெயர்களுக்குரிய வர்களுக்கென பிரித்து இறக்காது காலி துறைமுகத்தில் மொத்தமாக இறக்கி குவித்து வைத்துள்ளதால் அவரவர் மூடைகளை கண்டு பிடிப்பதில் வர்த்தகர்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்-

தமது பொருள்களை கொழும்புக்கு எடுத்து செல்வதற்காக கொக்கலையில் உள்ள ஹோட்டல்களில் தங்கும் தமிழ் வர்த்தகர்களை பொலிசார் புலிகளா அல்லது எல்லாளன் படையா என விசாரிக்கின்றனர்-

தென் மாகாணசபை தேர்தலில் காலித்துறைமுகம் சகல வசதி கொண்ட துறைமுகமாக விருத்தி செய்யப்படும் என உறுதியளிக்கப்பட்டது- ஆனால் துறைமுகம் இன்னமும் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது-

# குடும்ப அட்டைக்கு 2லீற்றர் மண்ணெண்ணெய்

பருத்தித்துறை வந்தடைந்த ''மாகோ'' கப்பலில் இருந்து இறக்கப்படும் மண்ணெண்ணெய் ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் ஒரு குடும்ப அட்டைக்கு இரண்டு லீற்றர் வீதம் விநியோகிக்கப்படவுள்ளது. அதனை மக்களுக்கு ஒரு லீற்றர் இருபத்தைந்துரூபாவுக்கு (உச்சவிலை) அதிகரிக்காது விற்பனை செய்ய வேண்டும் என்றும் சகல சங்கங்களும் புனர்வாழ்வுப்பகுதியில் உரிய வழங்கற்கட்டளையை உடனடியாக பெற்று மண்ணெண்ணெயினை நீர்வேலி, அச்சுவேலி, புலோலி பருத்தித்துறை. உடுப்பிட்டி, கட்டைவேலி, மருதங்கேணி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய சங்கங்கள் பருத்தித்துறை இறங்கு துறையிலும் ஏனைய சங்கங்கள் யாழ்களஞ்சியத்திலும் பெற்று விநியோகிக்குமாறு உதவித் திட்டப்பணிப்பாளர்கேட்டுள்ளார் மேலும் மானிப்பாய், சங்கானை, சாவகச்சேரி. பண்டத்தரிப்பு, கைதடி ஆகிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குரிய துவிச்சக்கர வண்டிகளையும்பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

# பரீட்சைகள்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் க.பொ.த (உ/த) முன்னோடிப் பரீட்சை பண்டித,பாலபண்டித, பிரவேச பண்டித பரீட்சை ஆகியவற்றை யூன் மாதத்தில் நடத்த முன் வந்துள்ளது.

க.பொ.த (உ/த) முன்னோடிப் பரீட்சையில் இந்து நாகரிகம், தமிழ் ஆகியன இடம் பெறும் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 11 ஆகும். பரீட்சை யூன் 3, 4 ஆந் திகதிகளில் முறையே இந்து நாகரிகமும், தமிழும் நடைபெறும் விண்ணப்பமாதிரிப் படிவங்களும், பரீட்சை விபரங்களும் அடங்கிய கடிதம் கல்லூரி அதிபர்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன.

பண்டித, பாலபண்டித, பிரவேச பண்டித பரீட்சைகள் யூன் மாதம் 15, 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறும்.

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-5-6 - வெள்ளி இரவு

8. 01-கலைமஞ்சரி- முதல் நூல் அறிமுகம் அறிமுகமாவது ''புலரிவு'' அடுத்து சிறுகதை ''பாசம்'' நிறைவாக கவிதை ''உன்னை இழப்பதா?''

8. 30 - செய்திகள்

8. 40 - அரசியல் அரங்கம் ''தென்னாசியாவில் கிளித்தட்டு மறிக்கும் அரசியல்''

1994-5-7 - சனி காலை

7. 02 - மாவீர வணக்கம்

7. 15 - நீங்கள் கேட்டவை

7. 30 - செய்திகள்

7. 35 - பத்திரிகைச் செய்திகள்

7. 40 - தொடர்ந்து நீங்கள் கேட்டவை

# விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலைய பாலர் பாடசாலை சிறார்களின் விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது,

# கண்டெடுப்பு

புடைவையொன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்குரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# குருபூசையும் பாராட்டு விழாவும்

(கொழும்புத்துறை)

சுண்டுக்குளி சைவமகா சபையினரின் அப்பர் சுவாமிகள் குருபூசை இன்று மாலை 5-00 மணிக்கு ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது- இதனையடுத்து சபைசெயலாளர் ஆசிரியர் வே- யுகபாலசிங்கம் முதுகலை மாணி பட்டம் பெற்றமையையொட்டி பாராட்டு விழா ஈச்சமோட்டை இந்து இளைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது- இதில் ஈச்சமோட்டை ஞான வைரவர் ஆலய பிரதம குரு தி- பாலசுப்பிரமணியக்குருக்கள், தென்னிந்திய திருச்சபை ஆதீன முதல்வர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் ஆசியுரை வழங்குவார் (24)

# எறிகணை

காயமடைந்தனர்.

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த ஏ செல்வராசா (37 வயது). என் ரங்கநாதன் (23 வயது), ஆர் சிவதாசன் (14 வயது) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்- இவர்கள் நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்தனர்- (பா),(நி)

# 82 அமைச்சர்களுக்கு வருடாந்தம் 5,000 மில்லியன் செலவாகிறது

## - சந்திரிகா

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா அரசு, எண்பத்திரெண்டு அமைச்சர்களுக்கும் சம்பளம் வழங்க வருடமொன்றுக்கு 5,000 மில்லியன் ரூபா செலவு செய்கிறது இவ்வாறு சந்திரிகா குமாரணதுங்கா கூறினார்

கம்பெல் பூங்காவில் நடந்த மே தினக் கூட்டத்தில் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் தொடர்ந்து பேசும் போது,

ஐ. தேசிய கட்சியினால் ஒரு மே தினக் கூட்டத்தை நடத்த முடியவில்லை சிறிசேன கூரேக்குப் பயந்து பிரேமதாசாவின் சிலை திறப்பு நிகழ்ச்சியில் கூட ஜனாதிபதி டி பி விஜேதுங்கா பங்குபற்றவில்லை ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு பிரிவினர் விஜேதுங்காவின் உயிருக்கே உலை வைக்கத் திட்டமிட்டிருந்ததாக எமக்குத் தகவல் எட்டியுள்ளது

தொழிலாளர் வர்க்கம் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியின் கீழ் பலர் காணாமற் போய் உள்ளார்கள் வாழ்க்கை வாழும் உரிமை மக்களின் கையில் இல்லை சாபம் பிடித்த அரசின் கையிலேயே உள்ளது

இராணுவத் தளபாடம் வேண்டுவதன் மூலம் தரகுப் பணம் சம்பாதிக்கும் ஒருசிலரின் நன்மைக்காகவே வடக்கு-கிழக்கு யுத்தம் தொடர்ந்து நடத்தப்படுகிறது யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று விரும்பிய ஜெனரல் ரஞ்சன் விஜேரெட்னாவும், லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும் மர்மமான சூழ்நிலையில் கொல்லப்பட்டார்கள்

விவசாயத்தை ஐக்கியதேசியக் கட்சி கவனிக்காமல் விட்டு விட்டது உரத்துக்கு வழங்கப்பட்ட மானியம் நிறுத்தப்பட்டதால் விவசாயிகள் தற்கொலை செய்கிறார்கள் தேசிய நிறுவனங்கள் சொற்ப பணத்துக்கு விற்கப்படுகின்றன மக்கள் மயமாக்கல் என்ற போர்வையில் பெரும் மோசடியே நடைபெறுகின்றது என்று கூறினார்

## நான்கு

கூரே, எஸ், தொண்டமான், ஹரோல்ட் ஹேரத், நந்தா மத்தியூ, ரேணுகா ஹேரத் ஆகியோரும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை

இப்பிரேரணையில் அரசாங்கத்திற்கு எதிராக 13 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

# இன்று முதல் தபால் விநியோகம்

(வடமராட்சி)

யாழ் மாவட்டத்திற்கென 'கோமாரி' கப்பலில் எடுத்து வரப்பட்ட 308 தபால் பொதிகள் நேற்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டன இத் தபால்கள் இன்று முதல் விநியோகம் செய்யப்படும்.

'பிளைங் பயோன்' கப்பல் மூலம் தபால் பொதிகள் எடுத்து வருவது தடைப்பட்டுள்ளது. தற்போதைக்கு இக் கப்பல் மூலம் தபால் பொதிகள் எடுத்து வரப்படமாட்டாதென அறிய முடிகிறது.

(யோ)


அறிவாற்றல் ஏடு



சிட்டு

வெளிவருகிறது.

[சி-9352]


# தீர்வுக்கு புலிகளுடன் பேசுக

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமானால் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டும் என பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தெரிவித்தேன்- அதுவே நிரந்தரமான தீர்வுக்கு வழி வகுக்கும் என்பது நம்பிக்கை என கம்பஹா மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளை தெரிவித்தார்-

நம்பிக்கையில்லா பிரேரணை மீது உரையாற்றும் போது இதனைக்கூறிய அவர் தமது நியாயமான கோரிக்கைகளை தெரிவுக்குழு ஏற்க மறுத்தமையினால் தான் தெரிவுக்குழுவிலிருந்து விலகியதாகவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் அரசியல் தீர்வொன்றை முன்வைக்கவில்லை எனக்கூறும் டெலோ குழுவினர் வடக்கில் புலிகளுக்கு எதிரான சண்டையில் அரசாங்கத்துடன் சேர்ந்து இராணுவத் தீர்வு காண முற்படுகின்றனர் பின்னர் பாராளுமன்றத்தில் அரசியல் தீர்வு பற்றி கூறுகின்றனர்என்றார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கான ஓர் ஆக்கபூர்வமான தீர்வை ஆளும் ஐ- தே- கவும், மற்றும் எதிர்க்கட்சிகளும் முன்வைக்கவில்லை என்றும் எனவே இப் பிரச்சினை நீண்டுசெல்வதற்கு இவ் இரு பகுதியினருமே காரணம் என சிறலங்கா பாராளுமன்றத்தில் டெலோ பாராளுமன்ற உறுப்பினர் நல்லதம்பி சிறிகாந்தா தெரிவித்தார்-

## வடக்கு

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி எதுவித அக்கறையுமற்றவராகக் காணப்பட்டதாகவும் இதனால் ஆயர்கள் இச் சந்திப்புக் குறித்து பூரண திருப்தி அற்றவர்களாகக்காணப்பட்டனா என்றும் எமக்கு கிடைத்த தகவல்கள் மேலும் தெரிவித்தன- (க),(நி)

## ஆங்கில

1 க-பொ-த-(சா-தர)பரீட்சையில் திறமைச்சித்தி பெற்று ஆங்கில ஆசிரியர் பயிற்சி பெறாது இருப்போர்-

2 அண்மையில் யாழ் இந்துவில் ஆங்கில ஆசிரியர் சேவை முன் பயிற்சி பெற்ற அனைத்து ஆசிரியர்களும்,

3 ஆங்கிலத்தில் க- பொ- த (சா- தர) திறமைச்சித்தி பெற்றுள்ள ஆங்கிலம் கற்க விரும்பும் ஆங்கில பயிற்சி ஆசிரியர் அல்லாத அனைத்து ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்- (பா)

## வன்னி, முல்லை

பரிசில்கள் வழங்கப்பட்டன முல்லை மாவட்டத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வித்தியானந்தாப் பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன, பத்து மாணவர்களுக்கு இப்பரிசில்கள் வழங்கப்பட்டன

பரிசில்களை திரு.கரிகாலன், வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களின் அரசியற்துறை நடுவப் பணியகப் பொறுப்பாளர் தங்கன் முல்லை மாவட்ட கல்விப் பணிப்பாளர் தணிகாசலம், ஆகியோர் வழங்கினர். வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரிசில்கள் நேற்றையதினம் புளியங்குளம் இந்துக்கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன. பரிசில்களை திரு கரிகாலன், திரு தங்கன் வன்னி மாவட்டக் கல்விப்பணிப்பாளர் செல்லையாஆகியோர் வழங்கினர்.

## பொறியியலாளர்

பொறியியலாளர் செல்வகுமார் அவருடைய தாய், தந்தையருக்கு ஏக புத்திரராவார். இவர் வெளிநாடு சென்று தனது மேற்படிப்பை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருந்தார் அத்துடன் தனதுநோய்வாய்ப்பட்டிருந்த தாயையும் பராமரிப்பது அவரது பொறுப்பாக இருந்து வந்தது. இவ்வாறு வெளிநாடு சென்று திரும்பியிருந்த பொறியியலாளரிடம் அதிகபொருள், பணம் இருக்குமென மேற்கூறிய சந்தேகநபர்களாகிய 1) செல்லையா மயில்வாகனம் அல்லது குமார், 2) திருமேனி நேசராசா ஆகியோர் கருதினார்கள். அவ்வாறான பொருள்களையும், பணத்தையும் கொள்ளையடிப்பதற்காக சந்தேக நபர்கள் திட்டமிட்டு பல தடவை முயற்சியெடுத்துள்ளார்கள்- அம் முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைந்தன- இறுதியாக 1993-05-26 ஆம் திகதி இரவு 11 00 மணி போல் கொலையுண்டவர் வழமையாக செல்லும் மலசல கூடத்திற்கு செல்லும் நேரத்தை அவதானித்து, அவர் மலசல கூடத்திற்குள் சென்றவுடன் பாளைக் கத்தியுடன் பதுங்கி மறைந்திருந்த மேற்கூறிய இரு சந்தேக நபர்களும் அம் மலசல கூடத்திற்குள் நுழைந்து அப்பாவியான செல்வகுமாரின் கழுத்தை பாளைக் கத்தியால் அவர் துடிதுடிக்க அவ்விருவரும் மாறிமாறி அறுத்துக்கொலை செய்தார்கள்-

இது சம்பந்தமான விசாரணையை மேற் கொண்ட எமது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கிடைக்கப் பெற்ற சாட்சியங்கள் யாவற்றையும் பதிவுசெய்து கொலைக்கெனப் பாவிக்கப்பட்ட கத்தியையும் மீட்டுக் கொண்டார்கள்-

மேற்கூறிய சந்தேக நபர்கள் இருவருக்கும் எதிராக உள்ள சாட்சியங்களின் கூற்றின் பிரகாரமும், அவர்களுடைய ஒப்புதல் வாக்குமூலங்களின் பிரகாரமும் எதுவித சந்தேகமுமின்றி அவர்களுக்கு எதிராகவுள்ள கொலைக குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது- ஆகவே குற்றவாளிகள் இருவருககும் நீதியின் பிரகாரம் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது-

மேற்கூறிய விசாரணையை எமது காவல்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சாட்சியங்கள், தகவல்கள் தந்து மேலும் பல உதவிகள் புரிந்த பொது மக்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது-





பின்வரும் அளவுகளில் எங்கும் விற்பனையாகின்றது.

140 கிராம 35/- 500 கிராம் 100/-

தோடம்பழச் சுவையுடன் கூடிய

ஃப்ருட்டி மிக்ஸ்

என்று கேட்டு வாங்கி பருகி மகிழ்வீர்.

சி-9351

யாழ். ஸ்ரீதரில்...

தினசரி மாலை 4, 6 மணி

சனி,ஞாயிறு காலை 10.30

மாலை 4, 6 மணி

காற்றுவெளி

சனி,ஞாயிறு 2.30மணிக்கு

ஒளிவீச்சு

(சி-9290)


# மரண அறிவித்தல்

## திரு. இராசேந்திரம் இரவீந்திரன் (ரவி)

திரு. இராசேந்திரம் இரவீந்திரன் அவர்கள் 04-05-94 அன்று பிரான்சில் காலமானார். அன்னார் இராசேந்திரம் மகேஸ்வரியின் அன்பு மகனும் காலஞ்சென்ற உமாதேவி, நிர்மலாதேவி (பிரான்ஸ்), சதாநந்திரன் (பிரான்ஸ்), கருணேந்திரன் (ஜேர்மனி), யோகேந்திரன் (ஜேர்மனி), நந்தினி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பட்டினசபை ஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல்:
மருமக்கள்

(8211)


வெகுவிரைவில்... மண்ணுக்காக

(இ)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994ஆம் ஆண்டு மே மாதம் 06ஆம் திகதி